Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-21 04-05-2005 புதன்கிழமை ஓசை -75


கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464
இல:184, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-11478)

- விழுப்புண் அடைந்த பெண் போராளிகளுக்கான -

# லெப்டினன் மயூரி நினைவில்லம்

# தேசியத் தலைவரினால் திறந்து வைப்பு!

(நமது செய்தியாளர்)

தமிழீழத்தேசியத் தலைவர் அவர்கள் கடந்த காலப் போரின்போது விழுப் புண்ணடைந்த பெண்போராளிகளுக்கான புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டாம் லெப்ரினன் மயூரி நினைவில்லத்தின் பெயர்ப்பலகையை நேற்று மாலை திரை நீக்கம் செய்து , புதிய கட்டடத்தையும் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)





## முழு உலகமுமே சிறிலங்கா அரசின் மீது குற்றம் சுமத்தும் சூழல் உருவாகி வருகின்றது

கம்யூனிஸ்ட் கட்சிச் செயலர் எச்சரிக்கை

(கொழும்பு)

"முழு உலகமுமே அரசாங்கத்தின்மீது குற்றம் சுமத்தக்கூடிய ஒரு பின்னணி உருவாகிக் கொண்டு வருகின்றது" இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரும், சிறிலங்காவின் அரசியலமைப்பு மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சருமான டி.யு.குணசேகர தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலையால் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களே மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பெருமளவு உயிரிழப்புக்களை முஸ்லிம் மக்கள் சந்தித்துள்ளனர். அதற்குப் பின்னர் தமிழர்கள் அதிகளவில் உயிரிழந்துள்ளனர். அவர்கள் சிறுபான்மையினர் என்பதால் அவர்கள் குறித்துப் போதிய அக்கறை செலுத்தாது போனால் சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்கள் அரசாங்கத்திற்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துமென அவர் தெரிவித்துள்ளார். வடக்குக் கிழக்கிற்கு பொதுக்கட்டமைப் பொன்றை ஏற்படுத்திக் கொடுத்து தேசியப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிப்பீர்களா?

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சிவராம் படுகொலையைக் கண்டித்து ஊடகவியலாளர் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மூத்த ஊடகவியலாளரும், இராணுவ ஆய்வாளருமான மாமனிதர் சிவராமின் படுகொலையைக் கண்டித்து நேற்றுக் கொழும்பில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.புறக்கோட்டை புகையிரத நிலையத்தின் முன்பாகத் திரண்ட நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்கள் அங்கிருந்து ஏரிக்கரை நிறுவனம் வரை ஊர்வலமாகச் சென்று பின்னர் அங்கிருந்து மீண்டும் கோட்டை புகையிரத நிலையத்தை வந்தடைந்தனர்.இந்த ஆர்ப்பாட்டத்தின்போது மாமனிதர் சிவராமின் படுகொலை குறித்து உரிய விசாரணைகளை நடத்துமாறு சனாதிபதிக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.இலங்கையில் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடவேண்டும் என்றும் ஊடகவியலாளர்களுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் கோசமெழுப்பினர். 1998ஆம் ஆண்டு சனாதிபதி சந்திரிகாவிற்கு எதிராக ஊடகவியலாளர்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்திற்குப் பின்னர் இலங்கையில் ஊடகவியலாளர்களால் நடத்தப்பட்ட மிகப் பெரிய ஆர்ப்பாட்டம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது. (32)

## ஐ.தே.க பிரதேச சபை உறுப்பினர் கலவானையில் சுட்டுக் கொலை!

இரத்தினபுரி கலவானை ஐக்கியதேசியக் கட்சி பிரதேச சபை உறுப்பினர் எச்.எம். வசந்த நேற்றுக் காலை இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகியுள்ளார்.

இவர் இரத்தினபுரியிலுள்ள பிரபல மாணிக்க வியாபாரியுமாவார். இவரது வர்த்தக நிலையமும் கலவானைப் பகுதியிலேயே உள்ளது.நேற்றுக்காலை 11.30 மணியளவில் வெள்ளைநிறக்காரில் வந்தவர்களால் அவரது வர்த்தக நிலையத்தில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். இதன்போது இவருக்கு அருகிலிருந்த நபரும் காயமடைந்துள்ளார். காயமடைந்தவர் கலவானை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் இரத்தினபுரிப் பகுதியை நோக்கிச்சென்றதாகக் கூறப்படுகிறது. சர்ப்பய எனப்படும் கும்பலே இச்சம்பவத்திற்குக் காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளதாக கலவானைப் பொலிசார் தெரிவித்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுட்டுக்கொலை

மட்டக்களப்புக்கு வடக்கே கிரானில் 25 வயது மதிக்கத்தக்க இளைஞரொருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டு வீதியில் வீசப்பட்டுள்ளார்.

இந்த இளைஞர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இவரது சடலம் தற்போது மட்டக்களப்பு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. கைகள்,கண்கள், கால்கள் கட்டப்பட்டு, தலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இந்தச் சடலம் நேற்றுக் காலை கண்டெடுக்கப்பட்டதாக வாழைச்சேனைப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

-வாழைச்சேனைப் பிரதேச-

## அரசியல்துறை அலுவலகம் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனைப் பிரதேச விடுதலைப்புலிகளின் அரசியல் துறை அலுவலகம் மீது நேற்று முன்தினமிரவு இனந்தெரியாத ஆயுதக் குழுவொன்றினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அலுவலகம் மீது இரண்டு கைக்குண்டுகள் வீசப்பட்டு, துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டு இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அலுவலகத்தின் கட்டடம் சேதங்களுக்குள்ளாகியுள்ளது. அரசியல்துறைப் போராளிகள் அங்கிருந்து உடனடியாக மாற்று வழிகளினால் வெளியேறியமையினால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. இச்சம்பவத்தையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த வாழைச்சேனைப் பொலிசார் துப்பாக்கியொன்றை அவ்விடத்திலிருந்து கண்டெடுத்துள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## 2007 A/L கணித, விஞ்ஞான பிரிவு வகுப்புக்கள் நடைபெறும் நேரசூசி

பௌதிகவியல் வகுப்பு - வெள்ளி 3.00-4.00 மணி, சனி 8.00-9.00 மணி, 11.00-1.00 மணி (எம்.எஸ்.தவபாலன்), இரசயானவியல் - புதன் 11.00-1.00 மணி, 4.00-5.00 மணி, வியாழன் 11.00-1.00 மணி (எஸ்.சண்), இணைந்த கணிதம் - சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 4.00-5.00 மணி (எஸ்.சிறிதரன்), உயிரியல்- சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 5.00-6.00 மணி (எம்.நேசன்) இடம்:- கேம்பிறிச் கல்லூரி, கிளிநொச்சி. (நிர்வாகம்) (சி.11780)

## தவறிவிட்டது

செல்வி.தாட்சாயினி செல்வச் சந்திரன் என்பவருடைய தேசிய அடையாளஅட்டை, பயண அனுமதிஅட்டை,சிறு குறிப்பேடு என்பன அடங்கிய சிறு பேஸ் 2005.04.30 அன்று தருமபுரத்திற்கும், வள்ளிபுனத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தேவிபுரம் கண்ணன் மருத்துவ மனையில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றேன்.தகவல்:- செ.தட்சாயினி, வள்ளிபுனம். (5845)

## விற்பனைக்குண்டு

இரணைப்பாலை வீதி, சிவநகர், 7 ஆம் வட்டாரத்தில் தென்னம் பிள்ளைத்தோட்டம் $^1/_3$ ஏக்கர் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு 7ஆம் வட்டாரம்,புதுக்குடியிருப்பு வே.சுப்பிரமணியம். வாங்கவிரும்புபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். (5842)

## சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு

அன்பு வாணிபத்தில் சீமெந்துக் கல் விற்பனைக்குண்டு. அளவு- "6x4"x12"கிடைக்க்குமிடம் அன்பு வாணிபம், அந்தோனியார் கோவிலடி அளம்பில் விலை.ஒருகல் 20/= (5919)

## காணி விற்பனைக்குண்டு

இ-1542 நரசிங்கன் கோயிலடி இரத்தினபுரம் கிளிநொச்சி. உரிமையாளர்-வீ.இராசம்மா. மேலதிக விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். (சி.6098)

## 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி, காலம்-சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC (H.B), (சி.11779)

## தவறிவிட்டது

இராசதுரை விஜயசாந் வயது 28 என்பவருடைய தேசிய அடையாள அட்டைஇல.780240814-V, ஓட்டுநர் உரிமம். Bankகாட்,சிம்காட் கொண்ட பேஸ் என்பன வட்டக்கச்சிப் பாடசாலைக்குஅருகில் தவறிவிட்டது. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் வேண்டுகிறேன். (சி.11835)

## விற்பனைக்குண்டு

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் வீதியில் 7ஆம் வட்டாரம் சிவநகரில் அமைந்துள்ள தென்னை பிரயோசனங்கள் உடைய குடியிருப்புக் காணியில் $^1/_4$ ஏக்கர்காணி விற்பனைக்குள்ளது. எடுக்க விரும்புவோர். காணியை நேரில் பார்த்து விலையைப் பேசிக்கொள்ளலாம். தொடர்புகொள்ளும் முகவரி. செ.அருளானந்தம், ராஜ்அழககம், முல்லை வீதி, புதுக்குடியிருப்பு. (5844)

# இளையோர் மைதானம் மாமுனையில் திறப்பு

(அலுவலகசெய்தியாளர்)

இளையோர் மைதானத் திறப்பு விழா நிகழ்வு நாளை மறுதினம் பிற்பகல் 4.00மணிக்கு செம்பியன்பற்று மாமுனையில் நடைபெறவுள்ளது.

வடக்கு கிழக்கு செயற்பாட்டு நிறுவனமும்,இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்த திட்டத்தின் மூலம் மேற்படி மைதானம் அமைக்கப் பெற்று நாளைமறுதினம் வைபவரீதியாக திறப்புவைபவம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

## தகவல் தொழில்நுட்ப நிறுவனம் – தமிழீழம் (ITO-T)

புதுக்குடியிருப்பு – முல்லை

# பணிநிலை வேண்டுகை

- ☆ கணினி மென்பொருள் தயாரிப்பு அபிவிருத்திப் பகுதி (Software production and devolopment unit)
- ☆ கணினி வலையமைப்புப் பகுதி (Computer communication and networking unit)
- ☆ இலத்திரனியல் பகுதி (Electronics unit)

ஆகிய பகுதிகளைத் தன்னகத்தே கொண்டமைந்து தமிழீழத்தின் தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டினை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்ற மேற்படி நிறுவனத்திற்கு பின்வரும் பணிநிலைக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

## இலத்திரனியல் தொழில்நுட்ப உதவியாளர் (பயிலுனர்)

### தகைமைகள்:

- ☆ க.பொ.த.உயர்தரத்தில் சித்தி அல்லது
- ☆ க.பொ.த.சாதரண தரத்தில் கணிதம் அல்லது விஞ்ஞானம் என்பவற்றில் சித்தி உட்பட ஏனைய பாடங்களில் சித்தி.
- ☆ ஆண் பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

பயிற்சிக் காலத்தின்போது பயிற்சிக்காலக் கொடுப்பனவாக ரூபா ஐந்து ஆயிரம் வழங்கப்படும். நெடுந்தூரத்தில்இருந்து வருவோர்க்கு தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களை 20.05.2005 திகதிக்கு முன்பாக கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். நேர்முகதேர்வு பற்றிய விபரங்கள் கடிதமூலமாகவும், பத்திரிகை வாயிலாகவும் விண்ணப்பதாரிகளுக்கு தெரியப்படுத்தப்படும்.

**விண்ணப்பங்கள்அனுப்பவேண்டிய முகவரி**

தகவல் தொழில்நுட்ப நிறுவனம் – தமிழீழம்,
சுயம்பு ஆதிபராசத்தி ஆலயவீதி,
4ஆம் வட்டாரம்,
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு

இணையத்தளமுகவரி :- www.ito-net.org
மின் அஞ்சல் முகவரி :- ito@ito-net.org

(6100)

# மே 7 முதல்

பாடநூல் வெளியீட்டிலும், நாடளாவிய விற்பனை மேம்படுத்தலிலும் கொழும்பில் முன்னணி வகிக்கும் லங்கா புத்தகசாலை அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின்

## மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற உள்நாட்டு வெளிநாட்டு [ஆங்கில, தமிழ்] பாடநூல்களும், அகராதிகள், கவிதைகள், சிறுகதைகள், சமய இலக்கியங்கள், மருத்துவ நூல்கள்மற்றும் பல

**இடம்:-** யாழ்.பல்கலைக்கழகவணிகத்துறைவிரிவுரை மண்டபம்

**காலம்:-** 2005மே மாதம் 07ஆம் திகதி முதல்15 ஆம்திகதிவரை

**நேரம்:-** காலை 9.00 மணிமுதல் மாலை 6.00மணிவரை (புதியநேரம்)(வாரஇறுதி நாட்களும் விடுமுறை நாட்களும் உட்பட)

**சிறப்பு விலைக்கழிவு**

தொடர்புகளுக்கு,
தலைவர்,வணிக மாணவர் மன்றம்,
யாழ்-பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணம்.

(சி.11857)

**324, Palaly Road, Jaffna.**

தகவல் தொழில்



**BIT** கொழும்பு பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்பு

## விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்

- கற்கை நெறிகள் MCS நிறுவனத்தில் நடைபெறும்.
- பரீட்சைகள் யாவும் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் யாழ் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும்.
- விண்ணப்பிப்போர் O/Lஇல் கணிதபாடத்தில் தேகைமையுடன் A/Lஇல் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
  - (O/Lஇல் தேகைமை பெறாதோர் A/Lஇல் Maths அல்லது Bio பிரிவுகளில் அல்லது பின்வரும் பாடங்களில் ஏதேனும் ஒன்றில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். Economics, Logic, Commerce, Accounts, Business Statistics, Geography)
  - (2005இல் A/Lபரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம், ஆயினும் பெறுபேறுகளின் போது மேற்குறித்த தகைமையை கொண்டிருத்தல் வேண்டும்)
- கற்கை நெறிக்கான மாணவர்கள் தெரிவுப்பரீட்சை ஒன்றின் மூலமே தெரிவு செய்யப்படுவர்.
- தெரிவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் MCS நிறுவனத்தில் இலவசமாக நடாத்தப்படும்.
- கற்கை நெறியில் முதல் ஆண்டைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் சான்றிதழ் வழங்கப்படும். *(Certificate in Information Technology)*
- கற்கைநெறி முழுவதனையும் பூர்த்தி செய்வதன் மூலம் நீங்களும் ஒரு கணனிப் பட்டதாரியாகலாம்.
- எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் BIT கற்கைநெறியை பயில்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.
- BIT கற்கைநெறியின் 1ம் ஆண்டினை MCSஇல் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு கனடிய பல்கலைக்கழகங்களில் கற்கைநெறியினை தொடர்வதற்கான அனுமதி.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 14-05-2005**
**விண்ணப்பப் படிவங்களிற்கும் மேலதிக விபரங்களிற்கும், நேரில்**
**MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-11875)

Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project

# தமிழீழ மாவட்ட நீதிமன்று-கிளிநொச்சி

வ.இல:-357/04,
தன்மை:-பணம்,
பெறுமதி:-30000/=

| வழக்காளி. ****** | எதிராளி. ****** |
|---|---|
| இராமசாமி செந்தில்வேல்,<br>உடுப்பிட்டி வடக்கு,<br>வெள்ளைக்காடு,<br>வல்வெட்டித்துறை. | எதிர்:-<br>இராசமாணிக்கம் அமிர்தலிங்கம்,<br>வீரபத்திரர் கோயில் மேற்கு வீதி,<br>உடுப்பிட்டி. |

## பகிரங்க அறிவித்தல்

மேற்குறித்த எதிராளிக்கு!

மேற்படி வழக்கில், உமக்கு எதிராக,வழக்காளியினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில்,உமக்கு பதிவுத்தபால் மூலம் அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்ட பொழுதும், நீர் குறித்த கட்டளையை ஏற்று நீதிமன்றில் தோன்றவில்லை.இதனால் இப்பகிரங்க அறிவித்தல் விடப்படுகின்றது. இப்பகிரங்க அறிவித்தல் வெளியாகி 15 நாட்களுக்கிடையில் நீரோ அல்லது உமது சார்பில் அக்கறையுடையவரோ மன்றில் தோன்றி சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும்.தவறும் பட்சத்தில், உமக்கு எதிராக ஒருமுக விளக்கம் நடாத்தி,தொடர் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இதனால் வெளிப்படுத்தி இப் பகிரங்க அறிவித்தல் விடப்படுகின்றது.

இந்த 2005 ஆம் ஆண்டு...05...மாதம்..02 திகதி.
"மன்றின் கட்டளைப் படி"

| | |
|---|---|
| வழக்காளி சட்டவாளர்,<br>தா.க.குலசங்கர்,<br>இரத்தினபுரம் வீதி,<br>கிளிநொச்சி. | பதிவாளர்,<br>மாணிக்கராசா,<br>தமிழீழ மாவட்டநீதிமன்று,<br>கிளிநொச்சி. |

(சி.11839)





# பாகிஸ்தான் ஐஸ் தொழிற்சாலையில் வெடிவிபத்து

## கட்டடங்கள் தரைமட்டம்; 40 பேர் பலி; பலர் படுகாயம்



(இஸ்லாமபாத்)

**பாகிஸ்தான் லாகூரில் உள்ள மூன்று மாடிக் கட்டடத்தின் கீழ்த் தளத்தி லுள்ள ஐஸ் தொழிற்சாலை ஒன்றில் காஷ் சிலிண்டர் வெடித்துச் சிதறி யதில் கட்டடம் பலத்த சேதமடைந்ததுடன் 40பேர் பலியானதாகவும் தெரிவிக் கப்படுகிறது.**

இச்சம்பவத்தில் மேலும் பலர் காயமடைந் ததாகவும் அருகிலிருந்த குடியிருப்புக் கட்டடங்களில் கதவுகள் யன்னல் என்பன சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படும் அதே வேளை மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெறு வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த வெடிப் புக்கு என்ன காரணமென்று அறியாதபோதும் இது சதிவேலையாக இருக்க முடியாது எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கட்டடம் பல குடியிருப்புக் களையும் சிறுஐஸ்தொழிற்சாலையையும் கொண்டுள்ளது. நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றபோது மக்கள் நித்திரையிலிருந்ததாகத் தெரிவிக் கப்படுகிறது.

ஏ.எஸ்.பி செய்தி நிறுவனத்திற்குப் பேட்டி யளித்த மீட்கப்பட்டவரான மொகமட் முஷ்டாக் தெரிவிக்கையில், காதை செவிடாக்கும்படி பாரிய சத்தம் ஒன்று கேட்டதாகவும், உலகம் தன்மீது விழப்போவதாக உணர்ந்ததாகவும். சற்று நேரத்தில் மீட்புப் பணியாளர்கள் தம்மை மீட்டதாகவும் கூறியுள்ளார்.பலியானவர்களின் தொகை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுவதாகவும், மேலும்இறந்தவர்களில் நான்கு பெண்களும், இரண்டு சிறுவர்களும் அடங்குவர் எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அணுவாயுதங்கள் வேண்டாம்; போர் வேண்டாம்

## ஐக்கிய நாடுகள் சபை அருகே எதிர்ப்புப் பேரணி

(நியூயோர்க்)

அணுவாயுதங்கள் வேண்டாம்: போர் வேண்டாம் என்ற முழக்கங்களுடன் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐ.நா. சபை அருகே ஞாயிற்றுக்கிழமை மாபெரும் அணு ஆயுத எதிர்ப்பு, போர் எதிர்ப்புப் பேரணி நடைபெற்றுள்ளது.

ஐ.நா சபை அமைந்துள்ள சாலை வழியாக நடந்த இப்பேரணி அருகேயுள்ள மத்திய பூங்காவில் முடிவடைந்தது.

பேரணியில் பங்கேற்ற அனைவரும் அங்கு அமைதிச் சின்னத்தின் வடிவத்தில் அணி வகுத்து நின்றனர். இனி யொரு ஹிரோஷிமா, இனியொரு நாகசாகி வேண்டாம் என்று முழக்கமிட்டனர்.

இந்தப் பேரணியில் 40 ஆயிரம் பேர் கலந்துகொண்டதாக இதன் அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

மத்திய பூங்காவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஹிரோஷிமா நகர மேயர் தடதோஷி அகிபா கலந்து கொண்டு பேசியதாவது;

ஹிரோஷிமா,நாகசாகியில் அணுகுண்டுத் தாக்குதலில் தப்பி உயிர் பிழைத்தவர்கள் தான் உலகில் அணு வாயுதப்போரின் கொடூரத்தை நேரடியாக உணர்ந்தவர்கள்.


1945 இல் அவர்கள் அனுபவித்த வேதனையை மீண்டும் உலகில் எவரும் அனுபவிக்கக் கூடாது. அதற்காக நாம் அனைவரும் இணைந்து போராட வேண்டும் என்றார்.

1945 ஆம் ஆண்டு அணுகுண்டுத் தாக்குதலில் உயிர் தப்பியவர் ஹிரோஷிமா நகரைச் சேர்ந்த சுனவோ சுபாய். அப்போது அவர் 20 வயதுக் கல்லூரி மாணவர். மொழி பெயர்ப்பாளர் உதவியோடு அவர் தனது கொடிய அனுப வத்தை கூட்டத்தினருக்குக் விவரித்தார்.

அணுவாயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தம் குறித்து ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மறு ஆய்வுக் கூட்டம் ஐ.நா சபையில் திங்கட்கிழமை தொடங்கியது.

அணுவாயுதம் வைத்திராத நாடுகள் அவற்றை தயாரிக்காமல் இருக்க உறுதி அளிக்கவும் அணுவாயுதம் வைத்துள்ள அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் சீனா ஆகிய நாடுகள் அவற்றை அழிப்பதை நோக்கி நடவடிக்கைகளை மேற்கொள்ள உறுதி அளிக்கவும் இந்த ஒப்பந்தம் வலியுறுத்துகிறது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் நாடு களின் பிரதிநிதிகளுக்கு அணு வாயுதப்போரின் ஆபத்தான விளைவுகளை நினைவுபடுத்தும் வகையில் நடைபெற்ற பேரணி அமைந்திருந்தது.



புதிய போப்பாண்டவர் ஜோசப் பெனடிக்ற் நேற்று முன்தினம் பீட்டர்ஸ் சதுக்கத்தில் லட்சக்கணக்கானவர்களுக்கு அருளாசி வழங்கிவிட்டு மறைந்த போப் ஜோன்போல் உடல் அடக்கம் செய்யப்பட்ட கல்லறைக்கு சென்று மண்டியிட்டு சிறிது நேரம் பிரார்த்தனை நடத்தினார்.



அமெரிக்க ஆதரவுடன் இயங்கும் ஆப்கான் அரசு தன்னுடன் பேச்சுக்களை நடத்த வேண்டும் எனக் கோரும் தலிபான் ஆட்சியின் வெளி நாட்டமைச்சர் வக்கில் அகமட் முதத வக்கிலீன (2001 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புகைப் படம்)

# ஈராக்கிலிருந்து அமெரிக்க இராணுவம் அடுத்த ஆண்டு முற்பகுதியில் வெளியேறும்

### —— ஈராக் பாதுகாப்பு ஆலோசகர்

(வோஷிங்டன்)

ஈராக்கில் இருந்து அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் வாபஸ் பெறுவது அடுத்த ஆண்டு முதல் படிப்படியாகத் தொடங்கும் என ஈராக்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து சி என் என் தொலைக்கட்சிக்கு ஈராக் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் மோபாக் அல்-ரூபையா கூறியுள்ளதாவது:-

அடுத்த ஆண்டின் முதல் பாதியில் ஈராக்கில் இருந்து அமெரிக்கா தலைமையிலான வெளிநாட்டுப் படைகளில் ஒரு பகுதி நாடு திரும்பும் என நம்புகிறேன். ஈராக்கில் தீவிரவாத ஒழிப்பு ஈராக் படைகளுக்கு ஆயுதப் பயிற்சிகளை மேற்கொள்ளும் பணிகளைப் பொறுத்தே எந்த அளவுக்குப் படை வாபஸ் பெறப்படும் என்பது தீர்மானிக்கப்படும் என்றார்.



ஈராக்கின் அபுகிராய் சிறைக்கைதிகளை சித்திரவதை செய்தமை தொடர்பாக வழக்கில் கலந்துகொண்டு திரும்பும் இராணுவ அதிகாரி லிண்டி இங்கிலண்ட் என்பவரும்,பாதுகாப்பு அதிகாரிகளான லொரி ஹெர்னன்டஸ்றிக் ஹெனன்டஸ் ஆகியோர்.

# பாடசாலைகளில் மதப் போதனை இல்லை

## மலேசியா அரசு கடுமையான உத்தரவு

(கோலாலம்பூர்)

பாடசாலைகளில் மதச் சின்னங்கள், மதம் தொடர்பான போதனைகளை ஒதுக்கி வைக்கப்பட வேண்டும். அப்போதுதான் பாடசாலைகளில் அதிக எண்ணிக்கையில் குழந்தைகள் சேருவர் என்று மலேசியா அரசு வலியுறுத்தியுள்ளது.

மலேசியப் பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களிடம் மத வேறுபாடுகளைக் களைய அரசு அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இது குறித்து மலேசியா தகவல் தொடர்பு அமைச்சர் டாடுக் செரி லிம் கெங் யாய்க் நிருபர்களிடம் தெரிவிக் கையில்;

மலேசியப் பாடசாலைகளில் படிக்கும் மாணவர் கள் தங்கள் மதச் சின்னங்களுடன் வருவது குறிப்பிட்ட ஒரு மதத்தைப் பற்றிப் போதிப்பது போன் றவற்றால் மாணவர்கள் சேர்க்கை எண்ணிக்கை குறைகிறது. மாணவர்களிடம் மத வேறுபாடுகள் இருக்கக்கூடாது. அவர்கள் அனைவருடனும் சமமாகப் பழக வேண்டும். பாடசாலைகளுக்கு மாணவர்கள் மதச் சின்னங்களுடன் வருவதற்குத் தடை விதிக்க வேண்டும் அத்துடன் குறிப்பிட்ட ஒரு மதத்தைப் பற்றிய போதனைகளை நிறுத்த வேண்டும்.

இதன் மூலம் தங்கள் குழந்தைகளை மற்ற மதத்தைச் சேர்ந்த பெற்றோரும் சேர்ப்பர். பள்ளி களில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையும் கணி சமாகக். கூடும் மதச் சம்பிரதாயங்களைக் கடை பிடிக்க வேண்டும் என்று விரும்பினால் குழந் தைகள் தங்கள் வீடுகளில் வைத்துக் கொள் ளட்டும் அல்லது மதம் தொடர்பான வகுப்பு களிலோ அல்லது வழிபாட்டுத் தலங்களிலோ வைத்துக் கொள்ளட்டும் மதத்துக்கும், பாடசாலை களுக்கும் தொடர்பில்லை.

மலேசிய அரசு பாடசாலைகளில் மாணவர் களின் சேர்க்கையை அதிகரிப்பது குறித்து அமைச் சரவையில் விரிவாக விவாதிக்கப்பட்டது. அப் போது மூன்று பரிந்துரைகள் வழங்கப்பட்டன. அதன் அடிப்படையில் இது போன்ற உத்த ரவுகள் மலேசியப் பாடசாலைகளுக்கு வழங் கப்பட்டுள்ளன.



நேற்று முன்தினம் பாக்தாத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பின் பின்ஈராக்கியர் ஒருவர் சம்பவ இடத்தை அவதானிக்கிறார்.

# விமானம் வீழ்ந்து நொருங்கியது உயிர் தப்பினார் அதிபர் ரிகார்டோ

ஹோண்டுராஸ் அதிபர் ரிகார்டோ மதுரோ ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விமான விபத்தொன்றில் உயிர் தப்பியுள்ளார்.

அதிபர் ரிகார்டோ, அவரது மகள் லோரீனா ஆகிய இருவரும் சிறிய விமானம் ஒன்றில் பயணம் செய்ததாகவும், கரிபியன் துறைமுகத்தில் விமானம் தரை இறங்க முற்பட்டபோது கீழே விழுந்து நெருங்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும் விமானத்தில் பயணம் செய்த விமானி உள்ளிட்ட அனைவரும் காயமின்றி உயிர் தப்பினார் என்று அதிபரின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

# சிங்கப்பூர் முன்னாள் சனாதிபதி வீ கிம் வீ காலமானார்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் முன்னாள் அதிபர் வீ கிம் வீ (வயது-89) நேற்று முன்தினம் காலமானார்.

சிங்கப்பூர் தொலைக்காட்சி வீ-யின் மரணத்தை அறிவித்துள்ளது. இவர் கடந்த 1980 முதல் 1990ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் சிங்கப்பூர் அதிபராக இருந்தவர்.

இவர் மலேசியா, ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட நாடுகளில் தூதராகவும் பணியாற்றியுள்ளார். அத்துடன் பத்திரிகையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

# ஆப்கானில் குண்டு வெடிப்பு இரண்டு பொலிசார் பலி

(கந்தஹார்)

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதி கள் வைத்த குண்டு வெடித்து இரண்டு பொலிசார் கொல்லப்பட்டனர். நான் கிற்கும் மேற்பட்டோர் காயமடைந் தனர்.காந்தஹார் அருகில் ஷாவாலி காட் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் வாகனம் அருகில். இந்தக் குண்டு வெடிப்பு ஏற்பட்டது. ரிமோட் கொன்றோல் மூலம் குண்டைத் தீவிர வாதிகள் வெடிக்கச் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவினரால்

# சுவிஸ்சர்லாந்தில் எழுச்சி பூர்வமாக நடத்தப்பட்ட "மே" நாள் நிகழ்வு

(சூரிச்)

**உலகத் தொழிலாளர்களின் ஒப்பற்ற தினமான "மே" நாள் சுவிஸ்சர்லாந்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழீழ விடுதலைப்புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவினரால் பேரெழுச்சியோடு நடத்தப்பட்டது. காலை 10.00 மணிக்கு ஆரம்பமான இப் பேரணி 1.00 மணியளவில் பொதுக் கூட்டத்துடன் நிறைவு பெற்றது.**


இதன் போது உலக விடுதலை இயக்கங்களின் அமைப்புக்களும் தேசிய விடுதலைப் போராட்டங்களை முன்னெடுக்கும் சக்திகளும், அடக்குமுறைகளிலிருந்து விடுபடத் துடிக்கும் இனங்களும் சுவிஸ் தொழிற்சங்கங்களும், சுவிஸ் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் இணைந்து பல்லாயிரக்கணக்கில் மக்கள் அணிவகுத்தனர்.

இவ்வெழுச்சிப் பேரணியில் சுவிஸ் வாழ் தமிழீழ மக்களும் பெருந் திரளாகக் கலந்துகொண்டு தமிழீழத் தேசிய இனவெழுச்சியை மீண்டும் சுவிஸ்சர்லாந்து மக்களுக்கு உணர்வலைகளாய் வெளிப்படுத்தினர்.

தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற பரப்புரைகளை கொள்கை முன்னெடுப்புக்களாய் முன்னிறுத்தி தமிழர் தாயகத்தின் உரிமைப் பிரச்சினைகளையும் தமிழினப்படுகொலைகளையும், சமாதான கால தமிழின அழிப்பு நடவடிக்கைகளையும், பதாதைகளாகத் தாங்கிய மக்கள் ஆக்ரோசமான கோசங்களை எழுப்பியவாறு சென்றதோடு, தலைசிறந்த ஊடகவியலாளனான மாமனிதர் தர்மரட்ணம் சிவராமின் (தராகி) படுகொலையினால் கொதிப்படைந்த ஆக்ரோசத்தோடும் இப் பேரணியில் கலந்துகொண்டனர். சூரிச்சின் மத்திய பிரதேசத்திலிருந்து ஆரம்பமான இப்பேரணி சூரிச்சின் பிரதான வீதிகளின் ஊடாக முன்சென்று தொழிற்சங்கத்தின் உப அலுவலகம் அமைந்திருக்கும் Helvetia Platz இல் முடிவடைந்தது.

தொடர்ப்பேரணி அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தது. காரணம் தாயகத்திலிருந்து வருகை தந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் கொள்கை முன்னெடுப்புக் கலைஞர்கள் கலந்துகொண்டு தெருவழிக் கூத்து வடிவத்தினூடே தாயகப் பரப்புரையை மேற்கொண்டதுவும் இப் பேரணிக்கு வலுச்சேர்த்தது.

பண்டைத்தமிழ் இலக்கியத்தின் தெருவழிக்கூத்து வடிவம் போல் அமைந்திருந்த தாயகக் கலைஞர்களின் வெளிப்பாடு, பேரணிக்கு விழிப்பை ஏற்படுத்தியதோடு, எமது தமிழ்மக்களின் உணர்வுகளிலும் அதி தீவிரமான எழுச்சியை ஏற்படுத்தியிருந்தது. இப் பேரணியில் மாமனிதர் சிவராம அவர்களின் படுகொலை யைக் கண்டித்து விடுதலைப்புலிகளினால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களும சிறிலங்கா அரசின் மனிதாபிமான மற்ற செயற்பாடுகளை வெளிப் படுத்தும் ஆவணங்களும் மொழி பெயர்க்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது.



மகளிர் கலைபண்பாட்டு கழகத்தினரின் விடுதலைக் கலைஞர்கள் நடித்த பொன்னாலையூர் கண்ணதாசனின் நெறியாழ்கையில் உருவாக்கப்பட்ட "உணர்வுகள்" என்ற நாடகத்தின் ஒரு காட்சியினை படத்தில் காணலாம். (படம் - குகன்)

## இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய 400 குடும்பங்களுக்கு ஐ.ஓ.எம். நிறுவனம் உதவி

புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு உதவிசெய்யும் நிறுவனமான ஐ.ஓ.எம் நிறுவனம் இந்தியாவிலிருந்து நாடு திரும்பி மீளக்குடியமர்ந்த 400 குடும்பங்களுக்கு தற்காலிக கொட்டகைகள் அமைத்துக்கொடுத்ததுள்ளதுடன், மருத்துவவசதிகளையும் செய்துள்ளது. ஒவ்வொரு கொட்டகைகளும் 25 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்தவையாகும்.

இதேவேளை இந்தியாவிலிருந்து நாடு திரும்பியவர்களில் கண், மூக்கு, தொண்டை பாதிப்புள்ள மக்களின் நலன் கருதி பேசாலை,தலைமன்னார், அடம்பன் போன்ற இடங்களில் விசேட சிகிச்சைமுகாம்களை அமைத்து மக்களுக்கு உதவி புரிந்துள்ளது. இப்பணிகளை மேற்படி (ஐ.ஓ.எம்) நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் மேற்கொண்டுள்ளார். (18)

## சிறுபோக நெற்செய்கை கால்நடைகளால் நாசம்

-வட்டக்கச்சி விவசாயிகள் கவலை-

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப்பிரதேசத்தில் 2005 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கையினை நாசம் செய்துவரும் கட்டாக்காலி கால் நடைகளின் தொல்லை அதிகரித்து வருகின்றது. இப்பிரதேசத்தில் சிறுபோக நெற்செய்கை ஆரம்பித்து 30 நாட்களுக்கு மேலானபோதும் பொருண்மியத்தினர் கால்நடை கட்டுப்படுத்தல் பற்றி அறிவிக்கப்பட்டு 15நாட்கள் ஆகியும் இதுவரையில் சீரான முறையில் கட்டாக்காலி கால்நடைகள் கட்டுப்படுத்தப்படவில்லை. இதனால் விவசாயிகள் பெரும்கவலை அடைந்துள்ளனர். (12))

## இராணுவ மண் அணைகளால் விவசாய நடவடிக்கைகள் பாதிப்பு

(நெடுங்கேணி)

நெடுங்கேணி, ஒட்டுசுட்டான் பிரதேசங்களில் இராணுவம் ஆக்கிரமித்திருந்த காலப்பகுதியில் அமைக்கப்பட்ட மண்அணைகளால் மக்களின் விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மீளக்குடியமர்வதிலும் அவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர்.

நெடுங்கேணி முதல் ஒட்டுசுட்டான் வரையுமான இடங்களில் மண் அணைகள் காணிகளில் போடப்பட்டுள்ளதால் அக்காணிகளும் இரண்டு மூன்று பிரிவுகளாக பிரிந்துள்ளன. இந்த மண் அணைகளால் சில இடங்களில் குளம் போன்று தண்ணீர் தேங்கியுள்ளது. இந்த மண் அணைக்கட்டுக்களை அகற்றுவதற்கு பாரிய கனரக வாகனங்களை பயன்படுத்த வேண்டியுள்ளது.

இந்த மண் அணைகளை அகற்றி விவசாய நடவடிக்கைகளையும், மீள் குடியமர்வையும் பொது மக்கள் மேற்கொள்ள சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

## திருமலை சூடைக்குடா பிரதேசத்தில் 167 வீடுகளை நிர்மாணிக்க நடவடிக்கை

(திருகோணமலை)

கிளிநொச்சியைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் சமுதாய முன்னேற்ற நிலையம், திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் கிழக்குப் பிர தேசத்தில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட சூடைக்குடா கிராமத்தில் அசெம்பிளி ஒப்கோட் (ASSEMBLY OF GOD) அமைப்புடன் இணைந்து 167 வீடுகளை நிர்மாணிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இது தொடர்பான உடன்படிக்கையில் திருகோணமலை அசெம்பிளி ஒப்கோட் சிரேஷ்ட போதகர் வண.ஜே. அன்ரனிதாஸ் சத்தியராஜாவும் சமுதாய முன்னேற்ற நிலையத்தின் திருகோணமலை மாவட்டப்பணிபபாளர் குணபாலன் நிரோஷனும் வார இறுதியில் திருகோணமலை நியூ சில்வர்ஸ்டார் ஹோட்டலில் நடைபெற்ற நிகழ்வில் கைச்சாத்திட்டனர்.

திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் முன்னிலையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. முதல் தொகுதியாக சூடைக்குடாவில் 67 வீடுகள், ஒவ்வொரு வீடும் சுமார் 05 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. இதற்கான நிதியுதவியை பின்லாந்து நாட்டு அமைப்பான பிடா (FIDA INTERNATIONAL) இன்ரநஷனல் திருமலை அசெம்பிளி ஒப்கோட் ஊடாக வழங்க முன்வந்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்; சூடைக்குடா, யுத்தம் மற்றும் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பிரதேசம் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட எமது கரையோரப்பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கு நாம் எதிர்பார்த்தபடி எமது தேவைகளுக்கு ஏற்றதாக எதுவுமே நடக்கவில்லை. பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதை அரசினுள் இருக்கும் சக்திகளே எதிர்க்கின்றது என்று குறிப்பிட்டார். அசெம்பிளி ஒப்கோட் கடற்கோள் நிவாரண செயற்றிட்ட முகாமையாளர் ராணி சாமுவேல், பிடா இன்ரநஷனல் நிவாரணம், அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பு செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர் பிரகாஷ்லால் ஆகியோரும் நிகழ்வில் பங்குபற்றினர்.

## 80 இலட்சம் ரூபா செலவில் அம்பாள்புரம் அபிவிருத்தி

முல்லைத்தீவு மாவட்ட பாண்டியன்குளம் செயலர் பிரிவிற்குட்பட்ட அம்பாள்புரம் கிராமத்தில் 80 இலட்சம் ரூபா செலவில் நியாப் இரண்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது. இது தொடர்பான கிராமிய மதிப்பீட்டு பங்கேற்பு சேவைகள் பகுப்பாய்வு கலந்துரையாடல் நிகழ்வு அம்பாள்புரம் கிராம பொது நோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ம.ஜெகு தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பின்தங்கிய கிராமத் தில் முக்கிய வேலைத்திட்டங்களை இனங்கண்டு செயற்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டது. குளங்கள், பொது நோக்கு மண்டபங்கள் பொதுக் கிணறுகள் 3 கிலோ மீற்றர் நீளம் கொண்ட கிராம வீதிகள் ஜீவனோபாய கடன் திட்டத்தின் கீழ் சுய தொழில் ஊக்குவித்தல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டது. நீர்ப்பாசன பிரதிதிட்ட பணிப்பாளர் சு.சிவகுமார் முல்லை மாவட்ட நியாப் திட்ட சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.ரட்ணராஜா அம்பாள்புரம் கிராம சேவையாளர் திருமதி வ.தவராஜா, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ரவிகரன், துணுக்காய் கால் நடை போதனாசிரியர் ச.அ.குருய் அப்பாள்புரம் அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.செந்தூரன் ஆகியோர் இங்கு கருத்துக்களை வழங்கினர். அபிவிருத்திகளை மேற்கொள் வதற்கான பகுப்பாய்வை நடாத்தி வரைபடம் மூலம் செய்ய வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாக விளக்கப்பட்டது. இந்நிகழ்வின் கிராம முன்னேற்ற சங்க பிரதி நிதியம், மாதர் கிராம அபிவிருத்தி சங்கப்பிரதி நிதிகள் மீனவர் சங்க பிரதிநிதிகள், பண்டியான் குளம் துணுக்காய் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர், பொது மக்கள், போராளிகள், சமூக உணர்வூட்டாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (24)

## "நீர்ப்" நிதியுதவியுடன் திரியாய் கிராமத்தில் அமைக்கப்பட்ட இருபது வீடுகள் மக்களிடம் கையளிப்பு

(திருகோணமலை)

வடக்குக் கிழக்கு வீடமைப்பு நிமாணத் திட்டத்தின் (நீர்ப்) நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத் திருகோணமலை மாவட்டச் செயலகம் திரியாய் கிராமத்தில் நிர்மாணித்த 20 வீடுகள் அங்கு மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களில் இருபது பேருக்கு கடந்த வார இறுதியில் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வு திரியாய் தமிழ் மகாவித்தியாலத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை மாவட்டத்திட்ட அலுவலர் வே.கலைவாணன் தலைமையில் நடைபெற்றது. விடுதலைப் புலிகளின் குச்சாவெளிப்பிரதேசப் பொறுப்பாளர் குலம், திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம், திருமலை மாவட்ட செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் வி.சுந்தரலிங்கம் தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை மாவட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் சி.குமரகுருபரன், ஏ.எச்.சாகுல்ஹமீது மற்றும் பிரமுகர்கள் பலர் நிகழ்வில் பங்குபற்றினர். பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம், முதலாவது வீட்டின் திறப்பை மீளக் குடியமர்ந்த குடும்பம் ஒன்றின் தலைவரான அன்பேசிவம் என்பவரிடம் கையளித்தார். அதனையடுத்து ஏனைய குடும்பங்களின் தலைவர்களிடம் மற்ற வீடுகளின் திறப்புக்களை பங்குபற்றிய பிரமுகர்கள் கையளித்தனர். உணவுப் பொதிகளும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் க.துரைரட்ணசிங்கம் கருத்துத தெரிவிக்கையில்; 1985- 1990 ஆம் ஆண்டு வன்செயல்களில் முற்றாக அழிக்கப்பட்ட கிராமம் திரியாய். ஒரு வீடு கூட இக்கிராமத்தில் இருக்காத நிலைமையில், யுத்த நிறுத்த உடன் படிக்கையின் பின்னர் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உதவி செய்து வருவது பாராட்டப்படவேண்டும் என்றார்.

விடுதலைப்புலிகளின் குச்சாவெளிப்பிரதேசப் பொறுப்பாளர் குலம் கருத்துத் தெரிவிக்கையில்; திரியாயில் மீளக்குடியமர்ந்த மக்கள் வைத்திய வசதிகளின்றி துன்பதுயரங்களுக்கு ஆளாகியுள்ளனர். காட்டு யானை தாக்கி மீளக்குடியமர்ந்த குடும்பம் ஒன்றின் தலைவர் உயிரிழந்தார். யானை தாக்கி ஆறுபேர் வரை காயமடைந்துள்ளனர் என்று கூறினார்.

சுமார் 1500 குடும்பங்கள் வாழ்ந்த திரியாய்க்கிராமத்தில் யுத்த நிறுத்த உடன்படிக்கை வந்தபின்னர், 273 குடும்பங்களே மீளக்குடியமர்ந்துள்ளன. அவர்களில் 35 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

# சனாதிபதியும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமே மாமனிதர் சிவராமின் படுகொலைக்குப் பொறுப்பு

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள்**

(சிட்னி)

**மாமனிதர் டி.சிவராம் அவர்களை சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையும், தமிழ்த்தேசியத்திற்கு எதிரான தேச விரோத சக்திகளும் இணைந்தே படுகொலை செய்துள்ளனர். உயர் பாதுகாப்புப்பகுதியான பாராளுமன்றத்திற்கு அருகில் இடம்பெற்ற இக்கொலைக்கு சிறிலங்கா சனாதிபதியும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமே முழுப்பொறுப்பு ஆகும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.**

அவுஸ்திரேலியா சென்றுள்ள தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராசசிங்கம், சே. கஜேந்திரன் ஆகியோர் அங்கிருந்து அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இக் கொலையினை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதில் சம்மந்தப்பட்டவர்களை அரசாங்கம் நீதியின் முன் நிறுத்த வேண்டும். அத்துடன் எதிர்காலத்தில் இவ்வாறான கோழைத்தனமான கொலைகள் இடம் பெறுவதை அரசாங்கம் தடுத்து நி வேண்டும்.

தமிழ்மக்களின் மறுக்கப்பட்ட உரிமைகளுக்காக தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்று வருகின்ற தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், வெளிப்படுத்துவதில் அயராது உழைத்தவர் டிசிவராம் அவர்கள், தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள பேரினவாத அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களை தனது எழுத்துக்கள் ஊடாக தமிழ், ஆங்கில ஊடகங்கள் மூலம் வெளி உலகிற்கு அம்பலப்படுத்துவதில் முன்நின்று உழைத்தவராவார்.

இணைந்த வடகிழக்குத்தாயகத்திலேயே தமிழ்மக்கள் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும், வாழ முடியும் என்று திடமாக நம்பியதுடன் அதன் ஒருமைப்பாட்டிற்காக உறுதியோடு, துணிவோடும் செயற்பட்டவர். இவரது காலையின் மூலம் தமிழ் தேசியத்திற்கான குரலை அடக்கி நசுக்கி விடலாம் என அரசாங்கம் நினைக்கின்றது. இக் கொலையானது சனநாயகத்திற்கும், பேச்சுச் சுதந்திரத்திற்கும் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகும்.

மாற்றுக் கருத்துக்களுக்குப் பதிலளிக்கத் தெரியாத, கருத்துக்களை கருத்துக்களால் வெல்ல முடியாத கோழைகளே இக் கொலையினைச் செய்துள்ளனர் இக் கொலையின் மூலம் மாமனிதர் சிவராம் போன்ற தமிழ் தேசியத்திற்காகக் குரல் கொடுக்கும் ஊடகவியலாளர்களை அடக்கி ஒடுக்கி விடலாம் என்று நினைத்தால் அது அவர்களின் பலவீனத்தையே காட்டுகின்றது.

சிவராம் கொலை செய்யப்பட்ட பின்னர் அவரது உடல் பாராளுமன்றத்தின் உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டது. இது தமிழத் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும். மிகவும் உயர் பாதுகாப்புப் பகுதியாக விருந்தும் இப்பிரதேசத்தில் சடலம் போடப்பட்டுள்ளது என்றால் அரசினதும், அதனது புலனாய்வுத் துறையினரின் பூரண ஆதரவின்றி இக்கொலை நடைபெற்றிருக்க முடியாதெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## கோண்டாவில் புகையிரத வீதி மிகவும் மோசமான நிலையில்

(கோண்டாவில்)

கோண்டாவில் மேற்குப் புகையிரத வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து வாகனங்களோ, பிரயாணிகளோ போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றது.

வீதித் திருத்தத்திற்கான கற்கள் கொண்டு வந்து குவிக்கப்பட்டு பலமாதங்களாகி உள்ளன. வீதியோரங்களிலேயே கற்கள் கிடப்பதினால் பொதுமக்கள் மேலும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஏற்கனவே வீதி சீரற்ற நிலையில் காணப்படும் அதேவேளை புனரமைக்கக் கற்கள் கொண்டு வந்து குவிக்கப்பட்டிருப்பதால் பல வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரியுள்ளனர். (41)

## ஆசிரியர்களிடம் களவாடியவர் கலாச்சாரம் பேணும் குழுவால் பிடிப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஆசிரியர்களின் கையடக்கத் தொலைபேசி மற்றும் பணம் என்பவற்றைக் களவாடிய நபர் கலாச்சாரம் பேணும் குழுவால் பிடிக்கப்பட்டுள்ளார்.

இவர் தற்போது தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருகையில் நேற்று முன்தினம் கல்லூரியில் ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது. அவ்வேளை கைப்பைகள் மற்றும் தொலைபேசிகள் என்பனவற்றை ஆசிரியர்கள் வகுப்பறையில் வைத்து விட்டு கூட்டத்தில் பங்கு கொண்டனர்.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கல்லூரியில் கூலிவேலையில் ஈடுபட்ட நபர் ஒருவர் ஆசிரியர்களின் மூன்று கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் கைப்பைகளில் இருந்த பணம் என்பவற்றைக் களவாடியுள்ளார். இதனை அடுத்துக் கலாச்சாரம் பேணும் குழுவினர் சம்பந்தப்பட்ட நபரைப் பிடித்து அரசியல்துறை அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர். (28)

## தென்மராட்சி பிரதேசத்தில் இலவச பயிற்சி வகுப்புக்கள்

(தென்மராட்சி)

தென்மராட்சிப்பிரதேசத்தில் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேலும் விரிவாக்கும் நோக்குடன் சர்வதேச தமிழீழமாணவர் பேரவையினரால் இலவசக்கணினிப்பயிற்சி வகுப்புக்களும், ஆங்கில வகுப்புக்களும், நடத்தப்பட விருப்பதாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி அரசடிப் பகுதியில் எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னராக இப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இன் க்கம் இப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொ லாம் என சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை யினர் தெரிவித்துள்ளனர். (28)

## ஆபாசப்படம் பார்த்தோர் அரசியல்துறையினரிடம் ஒப்படைப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி கைதடிப் பகுதியில் ஆபாசப்படம் பார்த்துக் கொண்டிருந்த குழு ஒன்று கலாச்சாரம் பேணும் குழுவால் பிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களைக் கலாச்சாரம் பேணும் குழுவினர் கைதடிப் பிரதேச அரசியல்துறையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவர்களிடம் இருந்து ஆபாச இறுவட்டுக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த இறுவட்டுக்கள் கொழும்பில் இருந்து பலாலி ஊடாக இப்பகுதிகளுக்குக் கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. யாழ். குடா நாட்டில் இவ்வாறு ஆபாசப்படம் பார்ப்போரின் தொகை அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (28)

**-யாழ். உயர் பாதுகாப்பு வலயத்தில்-**

## பனை, தென்னை மரங்கள் ஆக்கிரமிப்பு; தொழிலில் ஈடுபடுவோர் தொகை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களுள் அதிகளவான பனை, தென்னை மரங்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதால் இத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது என யாழ். மாவட்ட பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

முன்னைய காலங்களுடன் ஒப்பிடும்போது தற்பொழுது யாழ். குடாநாட்டில் 62 வீதமான தொழிலாளர்கள் தமது தொழிலைக் கைவிட்டு மாற்றுத் தொழில்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு ஏதுவான வசதிகள் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்காமை தொழிலாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த உரிய திட்டங்கள் முன்வைக்கப்படாமை போன்றவற்றின் காரணமாகவே இத் தொழிலைக் கைவிட்டு வேறு மாற்றுத் தொழில்களில் ஈடுபாடு காட்டுகின்றனர்.

இவற்றின் காரணமாகப் பனை, தென்னைவள தொழில்துறையில் பாரிய தாக்கங்கள் ஏற்பட்டுள்ளது என அச்சங்கத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர். (33)

## யாழ். மாநகரசபைக்குட்பட்ட பத்துக் கிராமங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பத்துக் கிராமங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் நிதி வழங்கும் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. வரும் நான்கு மாத காலத்துள் நிறைவேற்றி முடிக்கப்படவுள்ள இத்திட்டத்திற்காக இருநூறு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்படும் இந்தப் பத்துக் கிராமங்களும் மக்கள் மயப்படுத்தப்பட்ட செயலணிக் குழுக்களின் திட்டமிடலுக்கு ஏற்ப புனரமைப்புச் செய்யப்படும்.

இம்மாதம் ஆரம்பமாகி செம்ரெம்பர் மாதத்துக்குள் நிறைவேற்றி முடிக்கப்படவுள்ள இத்துரித திட்டம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் மாலை 03.00 மணிக்கு யாழ்.பொது நூலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் ஐநா நிதி வழங்கும் திட்டத்தின் நகர அபிவிருத்தித் திட்ட முகாமையாளர் எம்.பரமேஸ்வரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இ.இராசையா உட்பட பிரதேச செயலாளர்கள், கிராம சேவகர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (33)

### மயிர்க் கொட்டித் தொல்லை

யாழ்.இருபாலை நாவலர் பாடசாலையை அண்டிய பகுதிகளில் மயிர்க் கொட்டித் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது. பாடசாலையை அண்டிய பகுதிகளில் முருங்கை மரங்களும், வாதநாராணி மரங்களும் சீராக வெட்டப்படாமல் காடுகள் போல் ஓங்கி வளர்ந்திருப்பதால் இவற்றின் தொல்லை அதிகரித்துள்ளது. (41)

## இராணுவத்தால் கைதான மகன் உயிருடன் இல்லை: தகவல் அறிந்த தாய் அதிர்ச்சியால் மரணம்

இராணுவத்தினரால் ஒன்பது வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட மகன் உயிருடன் இல்லையென அறிந்த தாய் அதிர்ச்சியால் மரணமடைந்துள்ளார்.

இச் சம்பவம் மீசாலைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. கனகரத்தினம் சிவபாக்கியம் என்ற தாயாரே மரணமடைந்தவராவார்.

1996ஆம் ஆண்டு கிணறு வெட்டிக் கொண்டிருந்த சமயம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அவரது மகன் இன்னமும் வீடு திரும்பவில்லை. சென்ற வாரமே மகன் இறந்ததாகத் தகவல் அனுப்பப்பட்டதையடுத்து அதிர்ச்சியடைந்த அவர் மயக்கமடைந்தார். சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போதும் அவர் அங்கு மரணமடைந்துள்ளார்.

### வீதி புனரமைக்கப்படவில்லை

மல்லாகம் சோடாக் கம்பனி கிழக்கு ஒழுங்கைக்கு பல வருடங்களாகியும் வீதி போடப்படாமையினால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் தாங்களாக முன்வந்து வீதிக்குக் கற்களைப் போட்டு செம்மனிட்டுள்ளனர். பல தடவைகள் இவ் வீதிக்குத் தார் போடுதல் சம்பந்தமாக வலி. வடக்குப் பிரதேச சபையுடன் தொடர்பு கொண்ட போதிலும், எந்தவிதமான பயனும் ஏற்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (41)

**1993** நடுப்பகுதி, மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் இருந்து அந்தப் பயணம் ஆரம்பமானது. அணியணியாகப் புறப்பட்ட போராளிகள் வடபுல போரரங்கின் முக்கியத்துவம் வாய்ந்த தாக்குதல் ஒன்றில் பங்குகொள்ளும் உற்சாகத் தோடும் உத்வேகத்துடனும் விரைந்து கொண்டிருந்தனர்.

பல நாட்கள் தொடர்ச்சியாக நடந்தே மணலாற்றை அடையும் அப்பயணங்கள், பலசமர்களுக்குச் சமமானவை. கையில் ஆயுதம், முதுகில் தோளில் அடைப்பை காலைப் பதம்பார்க்கும் முட்கள், அடிக்கட்டைகள், உடல்கிழிக்கும் முட்கொடிகள், நீர்நிலைகள், "ஆறு கடத்தல்" கௌ முல்லைத்தீவுப் பெருந்தளத்தை வீழ்த்த நடைபெற்ற சமரில் ஜெயந்தன் படையணி முனைப்புடன் போரிட்டு தனது தீரத்தை வெளிக்காட்டியது. அதன் பின் சத்ஜெய, ஆனையிறவு, பரந்தன் என அதன் களங்கள் வடபோர்முனை எங்கும் விரி வடைந்தன.

1997ஆம் ஆண்டு சிறிலங்கா அரசு மிகப்பெரிய படையெடுப்பொன்றை எமது பெருந்தளப் பிரதேசமான வன்னி நோக்கி முன்னெடுக்கத் திட்டங்கள் வகுப்பதாக கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து எமது தேசியத் தலைமை அதனை தக்கமுறையில் எதிர்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டது.


மட்டக்களப்பில் வவுணதீவு சிறிலங்காப் படைமுகாம் தகர்க்கப்பட்டு சில நாட்களில் தலைமையிடம் இருந்து தகவல் ஒன்று கிடைக்கின்றது. மட்டக்களப்பிலுள்ள தாக்குதல் அணிகள் வன்னியிலுள்ள ஜெயந்தன் படையணியுடன் இணைவதற்காக விரைகின்றன. வவுணதீவில் 108 போராளிகளை இழந்து நூற்றுக்கணக்கான போராளிகள் காயமடைந்த அந்த நிலையிலும் உறுதியும் உத்வேகமும் கொண்ட அவ்வீரர்கள் உடன் புறப்படுகின்றனர். விழுப்புண்கள் மாறாத நிலையில் பிடிவாதமாக வந்தே தீருவோம் என்று புறப்பட்ட போர் வீரர்கள் வன்னிக் களத்தில் வரலாறு படைத்தனர்.

இந்த வன்னிச் சமர்க்களங்களில் 859 ஜெயந்தன் படையணி வீரர்கள் வீரகாவியமாகினர். எமது தாயகம் என்றும் எதிரிக்கு தலை வணங்காது என்று எடுத்துக் காட்டி, ஜெயசிக்குறுவை சிதறடித்த இவ்வீரர்கள் வீரத்தையும், ஈகத்தையும் தம் படையணியின் வரலாற்று வழித்தடத்தில் விதைத்துச் சென்றுள்ளனர்.

தொடர்ந்து வந்த ஆனையிறவிற்கான பக்கவாட்டு பாதுகாப்புத் தளங்களான கட்டைக்காட்டு, வெற்றிலைக் கேணிக்கான சமர், ஆனையிறவை வீழ்த்திய சண்டை என தொடர்ந்தும் ஜெயந்தனின் கணக்கில் களங்கள் சேர்ந்தன. ஆனையிறவு வெற்றி கொள்ளப்பட்டு யாழ்.குடா நோக்கிய ஜெயந்தனின் பயணம் சாவகச்சேரி கைப்பற்றல் வரைத் தொடர்ந்தது.

மணலாற்று முன்னரங்கில் செயற்பட்டுக் கொண்டிருந்த வேளை தேவை கருதி பெரும் அணி ஒன்று மட்டக்களப்பிற்கு நகர்ந்திட, எஞ்சிய வீரர்கள் வட போர்முனை முன்னரங்கில் நிலை கொண்டனர்.

இதுவரை சிங்களப்படையை சிதறடித்து வந்த ஜெயந்தன் படையணிக்கு ஒரு துரோகியின் துரோகத்தனத்தை துரத்தியடிக்க வேண்டிய நிலை ஏற்பட அது மட்டக்களப்பு விரைந்தது. தொகை காட்டி பேய்க்காட்ட நினைத்த துரோகிக்கு நாம் சிலநூறு பேர் அல்ல. தன் தேச விடுதலையை மனதில் தாங்கிய ஒவ்வொரு வீரனும் பல நூறுபேருக்குச் சமம் என்பதை ஜெயந்தன் படையணி அங்கு செயலில் காட்டியது.




## "எங்கும் செல்வோம் எதிலும் வெல்வோம்" என்ற படையணி கோசத்துடன் பூநகரி சமருடன் பிறப்பெடுத்து பன்னிரெண்டாண்டுகள் வரலாறு படைத்து நிற்கும் ஜெயந்தன் படையணி.

# அகவை பன்னிரெண்டில் ஆற்றல் மிகு படையணி

வாட்டிவெட்டல், தம்பலகாமம். சேறு,.. மனித தாங்குமாற்றலை வலுவாகச் சோதிக்கும் நேர்முகப் பரீட்சை.

எதிரியின் பிரதேசங்களை ஊடறுக்கையில் எதிர்கொள்ளும் தாக்குதல்கள், இழப்புக்கள், விழுப்புண், நீரில் மூழ்கிக்கூட சாவடைந்தோர்.. ஆம் இந்தப் பட்டறிவு பல களங்களுக்குச் சமன்.


படிப்படியாக மணலாறு வந்து சேர்ந்து கொண்ட அணிகள் எழுதுமட்டுவாள் ஜெயந்தன் முகாமில் ஒன்று சேர்க்கப்படுகின்றன. 1993இன் நடுப்பகுதியில் தொடங்கிய இந்த வருகை ஒக்டோபரில் இறுதி அணி வந்து சேரும் வரை நீடித்தது. எழுதுமட்டுவாள் முகாம் கலகலப்பானது. பயிற்சிகள் ஆரம்பமாகின. கிட்டத்தட்ட 1500இற்கு மேற்பட்டோரைக் கொண்ட இவ்வணியை ஒரு மரபுவழி படையணியாய் வளர்த்தெடுக்க வேண்டிய அவசியம் உணரப்பட்டது.

1993.05.04 இல் தேசியத் தலைமையின் வழிப்படுத்தலில் ஜெயந்தன் படையணி தோற்றம் பெற்றது. 1991 இதே நாளில் கடலில் காவியமான மட்டக்களப்பைச் சேர்ந்த கடற்கரும்புலி கப்டன் ஜெயந்தனின் பெயரே படையணிக்குச் சூட்டுவதென தீர்மானிக்கப்பட்டது. ஜெயந்தன் படையணியை பிரதிநிதித்துவப்படுத்திய போராளிகள், பொறுப்பாளர்கள், தளபதிகள் சண்டைகளில் ஏற்கனவே நன்கு பட்டறிவும் ஆற்றலும் உள்ளவர்களாக இருந்தபோதும் நடைபெற இருக்கும் "சமர்" அவர்களுக்கு வித்தியாசமானதே.

11.11.1993 தவளை நடவடிக்கை, ஜெயந்தன் படைணியின் கன்னிச்சமர் விடிவதற்குள்ளாக வீழ்த்தப்படுகின்றது அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பகுதி. தனது முதற் சமரிலேயே தனது திறனாற்றலை, தீவிர மூர்க்கச் செயற்பாட்டை வெளிக்காட்டி புலிகள் சேனையில் தனக்கென ஒரு தனி இடத்தை பிடித்துக் கொள்கின்றது ஜெயந்தன் படையணி.

முதற்சமரில் வித்தான தமது 91 வீரர்களின் நினைவுகளுடன், பின்வந்த சமர்களில் எல்லாம் தனது 'படையணிப் பரிமாணத்தை' அது உயர்நிலைக்கு இட்டுச்சென்றது.

புலிப்பாய்ச்சல், சூரியக்கதிர் என்பவற்றில் தீரத்துடன் சமரிட்டு தனது பட்டறிவை மேலும் பட்டைதீட்டிக் கொண்டது.




'ஜெயசிக்குறு', தலைவனாலேயே வரலாற்றில் 'முதன்மைச் சமர்' எனவும் சமர்களுக்கெல்லாம் தாய்ச்சமர் எனவும் விதந்துரைக்கப்பட்ட பெருஞ்சமர், உலக போரியல் வல்லுநர்களால் வியந்து நோக்கப்பட்ட பாதுகாப்புச் சமர், வருடக் கணக்கில் நீடித்த இச்சமரில் ஜெயந்தன் படையணியின் பங்கு முன்னிலை பெறுகின்றது. ஜெயசிக்குறு, ரிவிபல, ரணகோச என்று எதிரி முன் நகர்ந்த நடவடிக்கைகளில் எல்லாம் ஜெயந்தன் படையணி அதன் மூர்க்கத்தைக் காட்டியது.

ஓயாத அலைகள் 02,03 எதிரிநோக்கி எழுந்து அடித்த போது, ஜெயந்தனின் வீரர்கள் காட்டிய வீரம் வியக்கத்தக்கது.

ஜெயந்தன் அணி இன்று தனது 12 ஆவது அகவையை நிறைவு செய்கின்றது. வீரத்தாலும், தியாகத்தாலும் எழுதப்பட்ட அதன் வழித்தடத்தில் இது வரை 1234 வீரர்கள் வீரச் சாவடைந்துள்ளனர்.

பூநகரி சமருடன் பிறப்பெடுத்த இப்படையணி வட தமிழீழ சமர்க்களம் எங்கனும் புகழ் சேர்த்து இன்று தமது போர்ப் பிராந்தியத்தில் நிலை கொண்டுள்ளது. எதிர்காலச் சமர்க் களங்களிலும் ஜெயந்தன் தன் படையணி கோசமான எங்கும் செல்வோம் எதிலும் வெல்வோம் என்பதற்கிணங்க வரலாறு படைத்து நிற்கும்.

**மீனாடன்**

# 25.04.2005 - 01.05.2005




**25**

☞ கருணா குழு உறுப்பினரான கோபால்குமார் என்பவர் பொலநறுவ மாவட்டத்தில் கறபொல கிராமத்தில் சுடப்பட்டு படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் மரணம்.

☞ கிழக்கு மாகாணத்திலிருந்து மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் உட்பட 28போராளிகள் இராணுவப் பாதுகாப்புடன் வன்னி வந்தனர்.

☞ விவசாயம், கடல்சார் உற்பத்தியாளர்களின் நன்மை கருதி 1983 ஆம் ஆண்டிற்கு பின்பு முதன் முதலாக கிளி[illegible]வில் வாராந்த சந்தை ஆரம்பம்.



☞ சிறிலங்காவுக்குத் தேவையான நேரம் யுத்த தளபாடங்களை வழங்கவுள்ளதாக பாகிஸ்தான் நாட்டின் உயர்ஸ்தானிகர் பசீர்வலிமொஹமட் கொழும்பில் ஊடக மாநாட்டில் தெரிவிப்பு.


☞வவுனியா-யாழ்.சாலையில் அமைந்திருக்கும் ரயர்க்கடை ஒன்றின் மீது பெற்றோல் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது.

☞ வவுனியா மாவட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரை சர்வதேச வெலிட் அமைப்பினர் சந்தித்து கலந்துரையாடினர்.

☞ தலைமன்னார் கடற்பகுதியில் வைத்து நான்கு இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது.

**26**

☞ தந்தை செல்வாவின் 28 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு யாழ்ப்பாணத்திலுள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் இடம் பெற்றது.



☞ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் குவேனி உட்பட மூன்று பெண் போராளிகள் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பு மூன்றாவது தடவையாக ஒத்திவைப்பு.

☞ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகனும் அவரது உதவியாளரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

☞ படைய தொடக்கப் பயிற்சிக் கல்லூரியின் பத்தாம் ஆண்டு நிறைவு நிகழ்வினையொட்டி விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பம்.



☞ மட்டக்களப்பு மண்முனை கொக்கட்டிச்சோலை வாவி வழியாகப் பயணம் செய்த தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினரான சண்முகராசா தயானந்தராசா (கவிராஜ்) சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் கைது.

**27**

☞ மட்டக்களப்பு கிரான் மெதடிஸ்த குரு முதல்வரின் இல்லம் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்.

☞ குருநாகல் மாவட்டத்தில் பொல்காவல யாங்கால் மோதரப் பகுதியில் தொடருந்து பயணிகள் பேருந்து விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 38 பேர் பலி, 53 பேர் காயம்.



☞ சிறிலங்கா பொலிஸ் புலனாய்வுத் துறை[illegible] சேர்ந்த செல்டன் நவரட்ண இ[illegible]த நபர்களினால் சுட்டுக் கெ[illegible]

☞ கல்கி புலனாய்வுத்துறைப் பிரிவு அதிகாரி டி.ஜெயரட்ணம் காணாமல் போனமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இராணுவ புலனாய்வாளர்களை பாதுகாக்கும் தேசிய இயக்கம் என்ற அமைப்பு கொழும்பிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தினுள் புகுந்து ஆர்ப்பாட்டம்.

☞ அப்புத்தளையிலிருந்து தம்பேத்தன நோக்கிச் சென்று கொண்டிருந்த வான் ஒன்று 200 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த இருவர் பலி மேலும் நால்வர் காயம்.

☞யாழ்ப்பாணத்தில் ஒளிக்கலை ஒன்றிய அலுவலகம் புதிதாக தெரிவு செய்யப்பட்ட கட்டடத்தில் திறந்து வைப்பு.

☞ மட்டக்களப்பு செங்கலடி ஈ.பி.டி.பி. அலுவலகம் முன்பாக நின்ற கட்சி உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து இரு இளைஞர்கள் சிறிலங்காப் பொலிசாரால் கைது.

**28**

☞ அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பனுடன் மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சந்தித்துப் பேச்சு.

☞ சோதியா படையணியின் "விழி நிமிர்த்திய வீரம்" ஒலிப்பேழை கேணல் தீபனால் அறிமுகம் செய்து வைக்கப் பட்டது.

☞ கொழும்பை அண்மித்த பகுதியான பாணாந்துறையில் வைத்து முஸ்லிம் இளைஞன் ஆயுதங்களுடன் கைது.



☞ பிரபல இராணுவ ஆய்வாளரும் ஊடகவியலாளருமான தராகி என அழைக்கப்படும் தர்மரட்ணம் சிவராம் கொழும்பு பம்பலப்பிட்டியில் வைத்து இன்ரர் கூலர் வாகனத்தில் வந்த இனந்தெரியாதோரால் கடத்தப் பட்டார்.

☞ திருகோணமலை மூதூர்ப் பிரதேசத்தில் இராணுவத்தினரின் அராஜகப் போக்கைக் கண்டித்தும் அரசாங்கம் அதற்கு உடந்தையாக இருப்பதைக் கண்டித்தும் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று மூதூர் மக்களால் மேற்கொள்ளப்பட்டது.

☞ ஆனையிறவுப் படைத்தள மீட்பும் தீச்சுவாலை முறியடிப்புச் சமரினதும் வெற்றிவிழா இறுதி நிகழ்வுகள் ஆனையிறவுப் பகுதியில் வெகுசிறப்பாக இடம் பெற்றது.



☞ மட்டக்களப்பு கல்லடி அகதி முகாமில் வசித்து வந்த வரதர் அணியின் முன்னாள் உறுப்பினர் முருகேசு வரதராசா என்ற நபர் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் மரணம்.

☞ பண்டத்தரிப்புப் பகுதியில் இரண்டு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலையடுத்து இராணுவத்தினர் பண்டத்தரிப்பு சந்தியினூடாகப் பயணித்த பொதுமக்களைத் தாக்கியதையடுத்து அங்கு பதற்ற நிலை தோன்றியது.

☞ வவுனியா நகரில் இரண்டு ஓட்டோ வாகனக்குழுக்களுக்கிடையில் இடம் பெற்ற மோதலால் வவுனியா நகரப்பகுதி இரண்டு மணிநேரம் செயலிழந்தது. இதன் போது எட்டு ஓட்டோக்கள் சேதமாகின இரண்டு பொலிசார் காயமடைந்தனர்.

☞ சுனாமி நிவாரணம் தொடர்பாக பொதுக்கட்டமைப்புக்கெதிராக தேசிய பிக்குகள் முன்னணியினர் பொதுமக்களிடம் கையெழுத்துக்கள் சேகரிப்பு.

**29**

☞ கொழும்பு பல்லப்பிட்டியில் வைத்து கடத்திச் செல்லப்பட்ட இராணுவ ஆய்வாளரும் ஊடகவியலாளருமான டி.சிவராம் படுகொலை செய்யப்பட்ட நிலையில் அவரது சடலம் சிறிலங்காப் பாராளுமன்ற கட்டடத்திற்கு அருகேயுள்ள தியவதன ஆற்றின் ஜப்பான் நட்புறவுப் பாலத்தடியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது.



☞ யுத்த நடவடிக்கையின் போது அழிவடைந்த தென்மராட்சிப் பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பான உயர் மட்ட மாநாடு சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.



இனியபாரதி

☞ கருணா குழு முக்கியஸ்தரான இனியபாரதி உட்பட்ட இருவர் அம்பாறை நகரில் வைத்து கைத்துப்பாக்கியுடன் பொலிசாரால் கைது.

**30.**

☞ ஊடகவியலாளர் டி.சிவராம் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து யாழ்.குடாநாட்டில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டதுடன், யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தையும் நடத்தினர்.



☞ படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் சிவராம் அவர்களுக்குத் தேசியத் தலைவர் மாமனிதர் பட்டம் வழங்கிக் கௌரவம்.

☞ இந்தியாவிலிருந்து நான்குநாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்திருக்கும் இந்திய வெளியுறவுச் செயலர் ஷியாம் சரண் திருமலைக்கு விஜயம். கடற்படைத்தளத்தில் கடற்படைத்தளபதியைச் சந்தித்துப் பேச்சு.

*படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் சிவராமிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தமிழர் தாயகம் எங்கும் துக்கம் அனுஷ்டிப்பு.

**01**

☞ தமிழீழதேசியத்தலைமையை வலுப்படுத்தி உயர்தர்மத்தையும் நியாயத்தையும் கொண்ட தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் அர்ப்பணிப்புடன் தொடர்ந்து பயணிப்போம் என்ற தொனிப் பொருளுடன் மே நாள் நிகழ்வுகள் தமிழீழப் பிரதேசத்திலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் பேரெழுச்சியுடன் இடம்பெற்றது.



☞ மாமனிதர் தர்மரட்ணம் சிவராமின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்காக விடுதலைப் புலிகளின் 12 பேர்கொண்ட குழு ஒன்று மட்டக்களப்பிற்குப் புறப்பட்டது..

☞ தேசியத் தலைவரின் எதிர்பார்ப்பின் படி துடிப்புடன் பணியாற்றும் நாளேடு; ஈழநாதம் மட்டக்களப்புப் பதிப்பின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் விடுத்த வாழ்த்துச்செய்தியில் புகழாரம்.



# முழு நாடும் அறிந்த பிரச்சினையைப் பிரதமர் தெரியாதென்பது புதுமையாகவுள்ளது

## ஐ.தே கட்சி பா. உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தன

(கொழும்பு)

அண்மையில் பொதுக் கட்டமைப்புப் பற்றி தமக்கு ஒன்றுமே தெரியாது எனப் பிரதமர் ராஜபக்ஷ தெரிவித்த கூற்று அதிர்ச்சியளிப்பதாக கம்பகா மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரான ஜெயலத்ஜயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டின் பிரதமருக்கே அதன் முக்கிய பிரச்சினை குறித்து தெளிவில்லை எனும் போது அரசாங்கத்தைப் பற்றி ஒன்றும் கூறத் தேவையில்லை. அவர் இவ்வாறு கூறிக் கொள்வது பொதுக் கட்டமைப்பு விவகாரத்தில் தான் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதற்கே எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்நாட்டின் முக்கியமான பிரச்சினை இனநெருக்கடியும் சமாதான நடவடிக்கைகளுமே. இதனை முழு நாடும் அறிந்து வைத்திருக்கும் நிலையில் மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவிப்பது புதுமையிலும் புதுமையாகும்.

இவரை சந்திக்கும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் உள்நாட்டுப் பிரச்சினை பற்றி கேட்பதில்லையா என வினாவெழுப்பிய ஜயவர்த்தவினால் அவர்களுக்கு எவ்வாறு மகிந்தராஜபக்ஷ பதிலளிப்பார் என்றும் வினாவியுள்ளார்.

நாட்டின் தலைவர்வர்களில் பிரதமர் முக்கியமானவர் அவர் மீது பாரிய பொறுப்பு சுமத்தப்பட்டிருக்கின்றது.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு பிரதமர் செயற்பட முன்வர வேண்டும். பிரச்சினைகளிலிருந்து தப்பிக்க முயற்சி செய்யக் கூடாது பொதுக் கட்டமைப்பு பற்றி அவர் தெளிவான, உண்மையான நிலைப்பாட்டை உறுதிப்படுத்த வேண்டும். இல்லையேல் பிரதமர் என்ற பதவிக்கே அவமதிப்பு ஏற்படும் இவ்வாறு ஜெயலத் மேலும் தெரிவித்தார்.

# வர்த்தகர்களிடம் மிரட்டி கப்பம் பெற்ற முன்னாள் விமானப்படைச் சிப்பாய் கைது

(கொழும்பு)

திக்கெவலப்பகுதி முஸ்லிம் வர்த்தகர்களிடம் மிரட்டி கப்பம் பெற்று வந்த முன்னாள் விமானப்படைச்சிப்பாய் சிறிலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமானப்படையிலிருந்து தப்பியோடிய இவர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

தான் ஒரு பாதாள உலகக் கோஷ்டித் தலைவர் என்றும் பணம் தராவிட்டால் கொலை செய்வேன் என்றும் வர்த்தகர்களை மிரட்டி பணம் பெற்றுள்ளார் எனப் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த நபர் ஆட்டோவில் வந்து ஒரு இடத்தில் இறங்கிநின்றுகொண்டு கப்பப் பணத்தை ஆட்டோ சாரதியிடம் கொடுத்து அனுப்புமாறு கூறி தனது கையடக்கத் தொலைபேசி மூலம் வர்த்தகருக்கு அறிவித்து தனது கைவரிசையைக் காட்டிவந்தார்.

கடந்தவாரம் ஒரு முஸ்லிம் வர்த்தகரிடம் 55ஆயிரம் ரூபாவையும் மற்றொரு வர்த்தகரிடம் 75 ஆயிரம் ரூபாவையும் பெற்றுள்ளார். ஏற்கனவே இவரது தொந்தரவு குறித்து வர்த்தகர்கள் மாத்தறை பொலிசில் முறைப்பாடு செய்திருந்தனர். இந்நிலையில் இவர் குறிப்பிட்ட இடத்தில் நின்று ஆட்டோவில் பணத்தைப் பெற்றபோது பதுங்கியிருந்த பொலிசார் இவரை மடக்கிப் பிடித்துள்ளனர்.

# -2ஆவது கடவுச் சீட்டு பெறுவதாயின்- புலனாய்வுத்துறையினரின் விசாரணைக்கு விண்ணப்பதாரி முகங்கொடுக்க வேண்டும்

(கொழும்பு)

கடவுச் சீட்டுக்களை (பாஸ்போர்ட்) தொலைத்தோர் இனிப் புதிய கடவுச் சீட்டை பெறுவதாயின் அதற்கு முன் அவர்கள் குற்றப் புலன் விசாரணை அதிகாரிகளின் விசாரணைகளுக்குழு மூலம் விசாரிக்கப்படுவார் என்ற நடைமுறை நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் புதிய நடைமுறை இதுவரை இருக்கவில்லை என்று தெரிவித்துள்ள குடிவரவு குடியகல்வுத் திணைக்களத் தலைவர் அபேக்கோன் சிலர் கடவுச் சீட்டை வைத்துக் கொண்டே புதிய ஒன்றைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றார்கள் என்றும் இதனை தடுக்கவே மேற்படி நடைமுறை அமுல்படுத்தப்படுவதாகவும் கூறியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளுக்கான விசா நிராகரிக்கப்படும் போது அது கடவுச் சீட்டுக்களில் குறிப்பிடப்பட்டு சீல் இடப்படுகின்றது. இதனால் மீண்டும் அவர்கள் அந் நாடுகளுக்குச் செல்ல முடிவதில்லை. இதனால் இதை வைத்துக் கொண்டு வேறு ஒன்றைப் பெற முயற்சி செய்யப்படுகின்றது.

இதனால் இவர்கள் சி.ஐ.டி உள்ளிட்ட விசாரணைக்குழு முன் விசாரிக்கப்படும் நடைமுறைக்குள்ளாகுவர் என அபேக்கோன் தெரிவித்துள்ளார்.

# தமிழர்களை அரசு ஏமாற்ற நினைத்தால் பாரிய விபரீதமே ஏற்படும்- பா.உறுப்பினர் கனகசபை

(மட்டக்களப்பு)

கடற்கோளினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைப் புறக்கணித்து வரும் இந்த அரசாங்கம் அவர்களை ஏமாளிகளாக நினைத்த காலம் மலையேறி விட்டது. மீண்டும் மீண்டும் அவர்களை ஏமாற்ற நினைத்தால் பாரிய விபரீதமே ஏற்படும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்பியான த.கனகசபை தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிப்புக்குள்ளான களுவன்கேணிக்கு கடந்தவாரம் விஜயம் செய்து கடற்றொழிலாளர்கள் ஒழுங்கு செய்திருந்த கூட்டத்தில் அவர் உரைநிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடற்கோளினால் பாதிப்புக்குள்ளான தமிழ்மக்களின் இயல்பு வாழ்வு வழமைக்குத்திரும்பாத நிலையில் அவர்கள் பெருந்துயரத்திற்குள்ளாகியுள்ளனர்.

தமிழ்ப்புத்தாண்டு தினத்தில் கூட மட்டக்களப்பு மாவட்டத்தில் சில முகாம்களில் தண்ணீர் இன்றி மக்கள் பெரும் அவஸ்தைக்குள்ளாகினர்.

தற்போதும் அங்கு நிலவும் கடும் உஷ்ணம் காரணமாக மக்கள் அல்லலுறுகின்றனர் என்று தெரிவித்த அவர் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது பொய்யையும் புரட்டையும் கூறி மக்களைத் திசை திருப்புவதாகக் கூறினார்.

இந்த அரசாங்கத்துக்குள் இரு நிர்வாகங்கள் நடைபெறுகின்றன. ஒரு புறம் சந்திரிகா, இன்னொருபுறம் ஜே.வி.பி அதிகாரிகள் யாரின் பேச்சுக்குச் செவிசாய்ப்பது எனத் திணறுகின்றனர். தென்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நிவாரணப்பணிகளில் ஒரு வீதம் கூட இங்கு இடம்பெறவில்லை தற்காலிகக் குடிமனைகள் பூரணப்படுத்தப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறுமி மீது பாலியல் வல்லுறவு புரிந்த பிக்கு கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை

(கொழும்பு)

14 வயதுடைய பாடசாலை மாணவி பௌத்தவிகாரைக்குச் சென்ற வேளை அவ்விகாரையில் உள்ள 35 வயதுடைய பௌத்த பிக்கு ஒருவரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த வாரம் தெரணிய கலைலினியகல பகுதியில் உள்ள ஸ்ரீபோதிராம விகாரையில் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக தெரணியகலை பொலிஸ் நிலைய பெண் சப் இன்ஸ் பெக்டர் திருமதி. வி.சந்திரா தகவல் தருகையில்; சம்பவதினம் மாலை பாதிக்கப்பட்ட சிறுமி விகாரைக்குச் சென்று பூஞ்செடிகளுக்குத் தண்ணீ ஊற்றி விட்டு வீடு திரும்ப இருந்த நேரம் பௌத்தபிக்கு அச்சிறுமியை அழைத்து நூறுரூபா பணத்தைக் கொடுத்து தனது அறையில் வைத்து விட்டு வருமாறு கூறியுள்ளார்.

அச்சிறுமி அறைக்குச்சென்றவுடன் சிறுமியைப் பின்தொடர்ந்து சென்ற பிக்குசிறுமிமீது பாலியல் வல்லுறவை மேற்கொண்டுள்ளார்.

இச்சம்பவத்தையடுத்து பௌத்த பிக்கு கைது செய்யப்பட்டு ரூவான் வெல்ல நீதிமன்றத்தில் ஆஜர் செய்த வேளை நீதவான் கயந்தபிரேமச்சந்திர பௌத்தபிக்குவை 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்து சிறுமியை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தி நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிசாருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் அதிபராகக் கடமையேற்று இடம்பெயர்வுச் சூழலிலும் அரும்பணியாற்றியதுடன் கோட்டக்கல்வி அலுவலராக, பிரதிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி ஒய்வு பெறும் வேளையில் சேவையைப் பாராட்டி ஓய்வுகாலம சிறப்புற வாழ்த்துகின்றோம்.

திரு.க.வைரமுத்து

*பாடசாலைச் சமூகம்,*
*கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி,*
*கிளிநொச்சி*

*(சி.11859)*


# களனி பல்கலைக்கழக மாணவரிடையே மோதல்

(கொழும்பு))

களனி பல்கலைக்கழகத்தின் பொல்ஹேன் கொட மாணவர் விடுதியில் கடந்த ஞாயிறு, திங்கள் ஆகிய இரு நாட்களும் மாணவர் மத்தியில் மோதல்கள் இடம்பெற்றதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

பொல்ஹேன்கொட மாணவர் விடுதியில் காப்பாளர் பொலிசாருக்கு வழங்கிய தகவலின்படி சம்பவ இடத்திற்கு விரைந்த விசேட பொலிஸ் குழு மாணவர் மத்தியில் அமைதியைக் கொண்டு வந்து சுமுக நிலைமையை ஏற்படுத்தியதாக களனி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

களனிப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படும் புதிய மாணவர்களுக்கென அண்மையில் களனி பொல்ஹேன்கொடவில் மாணவர் தங்குமிடவிடுதித் தொகுதியொன்று திறந்து வைக்கப்பட்டது.

இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத களனிப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட பழையமாணவர்கள் குழுவொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திடீரென புதிய மாணவர் விடுதிக்குள் அத்துமீறிப் பிரவேசித்து அங்கு தங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதனையடுத்து ஏற்கனவே பதிவு பெற்று தங்கியிருந்த புதிய மாணவர்களுக்கும் அத்துமீறலில் ஈடுபட்ட பழைய மாணவர்களுக்குமிடையில் முறுகல்நிலை ஏற்பட்டு அது மோதலாக வெடித்தது. இதையடுத்து அங்கு சென்ற பொலிசார் மாணவரிடையேயான மோதல்களைத்தடுத்து நிறுத்தி அந்த மாணவர்கள் தங்குமிடத்துக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கியுள்ளனர்.


Regd No:- NEP/DS/SS/01
Tvec Regd No :- P21/0002

## COMTEC

COMMUNITY & TECHNICAL EDUCATION CENTRE

## பதவி வெற்றிடம்

கொம்ரெக் நிறுவனம் கடந்த 15 வருடங்களிற்கு மேலாக தொழிற்பயிற்சியினை வழங்கி வருகின்ற ஓர் அரச சார்பற்ற நிறுவனமாகும். முல்லைத்தீவில் நடைபெற உள்ள பயிற்சிக்குக் கீழ்வரும் பதவி வெற்றிடமாக உள்ளது. பொருத்தமான தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பதவி :- தச்சுவேலை போதனாசிரியர் (Carpentry Instructor)
:-மேசன் பயிற்சி போதனாசிரியர் (Masonry Instructor)

வயது:- 25-60

முன் அனுபவம் விரும்பத்தக்கது.

சம்பளம்:- 18,000/-+ ஊழியர் சேமலாப நிதியம்

பதவி நியமனம் முற்றிலும் ஒப்பந்த அடிப்படையிலானது. உங்கள் விண்ணப்பப்படிவங்களை 16.05.2005 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திட்ட முகாமையாளர்,
கொம்ரெக்,
கைத்தொழில் பேட்டை,
பூந்தோட்டம், வவுனியா

*(சி.6099)*

# மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு–கிழக்கு மாகாணசபை

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

## "ஆ.அ.வ" கடன் இல:2043– SRI (SF)

# யாழ்.மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் இல:05

01. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்ட (CAARP) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து ("ஆ.அ.வ") கடன் ஒன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப் பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்கு தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளை தற்போது கோருகின்றனர்.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறு விலை பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | JF/CAARP/ED/10 | மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயத்தில் அதிபர் அலுவலகம் நூலகம் உள்ளடங்கலாக 110'X25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M6 | 51,000/= |
| 02 | JF/CAARP/ED/13 | மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயத்தில் 90'X25'அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M7 | 35,000/= |
| 03 | JF/CAARP/HS/06 | தெல்லிப்பழை மாவட்ட புற்றுநோய் வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியின் விடுதி புனரமைத்தல் கட்டடம் 2-தொகுதி 1. | M7 | 33,000/= |
| 04 | JF/CAARP/HS/06 | தெல்லிப்பழை மாவட்ட புற்றுநோய் வைத்தியசாலையில் சமயலறை மற்றும் மருந்துகள் களஞ்சியப்படுத்தும் அறை புனரமைத்தல் கட்டடம்-2-தொகுதி-2. | M7 | 33,000/= |
| 05 | JF/CAARP/ED/24 | சென்ஜோன்ஸ் கல்லூரியில் 90'X40' அளவுடைய நூலகக் கட்டடம் மீளமைத்தல் | M7 | 36,000/= |
| 06 | JF/CAARP/ED/25 | பொலிகண்டி சைவதமிழ்க்கலவன் பாடசாலையில் விஞ்ஞான ஆய்வு கூடம் உள்ளடங்கலாக 110'X25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M6 | 53,000/= |
| 07 | JF/CAARP/ED/26 | வல்வெட்டித்துறை எ.எம்.ரி.எம்.எஸ் இல் அதிபர் அலுவலகம் உள்ளடங்கலாக 110'X25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல். | M6 | 50,500/= |
| 08 | JF/CAARP/ED/27 | உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலையில் 60'X25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் பூரணப்படுத்தல். | M8 | 17,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலை யிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் தரப் படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட் டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தெ.நி.ஒ.ச) உறுப்பினராக ("இக்ராட் டுடன் M7 இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே) இருத்தல் வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைச் திருப்திகரமாக முடிவுறுத் தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் / அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.

IV இக்ராட"வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிலிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றளலவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைசெய்ததனால் தகுதியற்றவர் என்ற பிர கடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

4. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்வி கோரமுடியும். ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற் கொள் ளும் CAARP வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலதிக விபரங்களை மாவட்ட பிரதித்திட்டப் பணிப்பாளர் அலுவலகம் நேஊமுசு கச்சேரி யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி 021-2223625, தொலைநகல் :021-2225163 மின்அஞ்சல்:necordjf @sltnet.lk

6. ஒப்பந்த ஆவணங்கள் வைகாசி மாதம் 4 ஆம் திகதி முதல் வைகாசி மாதம் 18 ஆம் திகதிவரை முற்பகல் 9.30 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை வேலைநாட்களில் மேற்படி அலுவலகத்தில் இருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும், கேள்விபிடுவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் இது தொடர் பாக பந்தி 8இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் "தலைவர், மாவட்டக்கேள்விச்சபை, NECORD கச்சேரி, யாழ்ப்பாணம்" இற்கு வைகாசி மாதம் 27 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்பாகக் கிடைக்க வேண் டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகோருவோர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுக மளிக்கலாம்.

9. ஒப்பந்தக்காரருக்கு கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் வைகாசி மாதம் 16 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்கு அல்லது செல வீனங்களுக்குத் தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

*க. கணேஷ்,*
*தலைவர்,மாவட்ட கேள்விச்சபை,*
*அரசாங்க அதிபர்,*
*யாழ்ப்பாண மாவட்டம்.*

(சி.11838)

# சுனாமி மும்முனை கிரிக்கெட் போட்டி சிறிலங்காவைத் தோற்கடித்தது-பாக்.



இந்தியா, பாகிஸ்தான், இலங்கை அணிகள் கலந்து கொள்ளும் சுனாமி நிவாரண கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது போட்டி அபுதாபியில் நேற்று முன்தினம் நடந்தது. இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் லெவன் 76 ஓட்டங்களால் இலங்கை லெவனை விழ்த்தியது.

முதலில் ஆடிய பாகிஸ்தான் லெவன் 50 ஓவரில் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 290 ஓட்டம் எடுத்தது. யூனுஸ்கான் 71 ஓட்டங்களை ஆட்டமிழக்காதும் சோயப்மாலிக் 68 ஓட்டமும் எடுத்தன. பின்னர் ஆடிய இலங்கை 214 ஓட்டங்களில் சுருண்டது. ஜெயவர்த்தன 69 ஓட்டம் எடுத்தார். தொடக்க ஆட்டத்தில் இலங்கை 97 ஓட்டங்களில் இந்தியாவைத் தோற்கடித்திருந்தது.

# கிறிஸ்கெய்ல்ஸ் முச்சதம் அடித்து சாதனை

## தென்னாபிரிக்காவுக்கு எதிராக மே.தீவு பதிலடி





மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் வீரரான கிறிஸ் கெய்ல்ஸ் டெஸ்ட் போட்டியில் முச்சதம் பெற்ற வீரர் வரிசையில் தனது நாட்டில் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளார்.

அன்டிகுவாவில் நடைபெறும் தென்னாபிரிக்காவிற்கெதிரான நான்காவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்சில் அவர் இச்சாதனையை நிகழ்த்தியுள்ளார். மூன்றாம் நாள் ஆட்டநேரமுடிவின்போது ஆட்டமிழக்காமல் 184 ஓட்டங்களுடன் நான்காம் நாளில் ஆட்டத்தைத் தொடர்ந்த அவர் 317 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.அவருடன் மேலும்மூன்று வீரர்கள் ஆட்டமிழக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி ஐந்து விக்கெட் இழப்புக்கு 565 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ராம்நரேஷ்சர்வான் 127 ஓட்டங்களிலும், பிரைன்லாரா நான்கு ஓட்டங்களுக்கும் ஆட்டமிழந்தனர்.மேற்கிந்தியத்தீவுகள் அணியில் முச்சதம் பெற்றோரில் பிறையன் லாரா முதலிடத்திலும், (375), (400) சோபர்ஸ் (365) இரண்டாமிடத்திலும், லோரன்ஸ் (302) மூன்றாமிடத்திலும், கெய்ல்ஸ் நாலாமிடத்திலும் உள்ளனர்.



இப்போட்டியில் 29 பந்துகளைச் சந்தித்து "நான்கு" ஓட்டங்களை (பவுண்டரி) மட்டும் பெற்ற முன்னாள் அணித்தலைவர் லாராவின் 36ஆவது பிறந்தநாள் நேற்று முன்தினம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முச்சதம் அடித்த வீரர்கள்

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 300 ஓட்டங்களுக்கு மேல் குவித்த வீரர்கள், நாடு எதிரான நாடு இடம், ஓட்டம்,

லாறா மேற் கிந்தியத்தீவு இங்கிலாந்து அன்டிகுவா 400, ஹைடன் அவுஸ்திரேலியா, சிப்பாப்வே பெர்த் 380, லாறா மேற்கிந்தியத்தீவு இங்கிலாந்து அன்டிகுவா 375, சோபர்ஸ் மேற்கிந்தியத்தீவு, பாகிஸ்தான் கிங்ஸ்டன் 365, ஹட்டன் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஓவல் 364, ஜெயசூரியா இலங்கை-இந்தியா-கொழும்பு 340, ஹனீப்முகமது பாகிஸ்தான் மேற்கிந்தியத்தீவு பிரிட்ஜ்டவுன் 337, ஹேமன்ட் இங்கிலாந்து-நியூசிலாந்து ஒக்லாந்து 336, டெய்லர் அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் பெஷாவர் 334, பிரட்மன் அவுஸ்திரேலியா இங்கிலாந்து லோட்ஸ் 334, கிரகாம்கூச் இங்கிலாந்து இந்தியா-லோர்ட்ஸ் 333, இன்சமாம் பாகிஸ்தான், நியூசிலாந்து லாகூர் 329, சாந்தம் இங்கிலாந்து மேற்கிந்தியத்தீவு கிங்ஸ்டன் 325, ஹெய்ல்ஸ் மேற்கிந்தியத்தீவு, தென்னாபிரிக்கா, அன்டிகுவா 317, பொப்சிம்சன் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து மான்ஷெட்டர் 311, எட்ரிச் இங்கிலாந்து, நியூசிலாந்து லோட்ஸ் 310, ஷேவாக் இந்தியா பாகிஸ்தான் முல்தான் 309

# விட்டுக்கொடுத்து ஆடினார் மாலிக் ஒரு டெஸ்ட் போட்டியில் ஆடத் தடை



கிரிக்கெட் போட்டியில் விட்டுக் கொடுத்து ஆடிய மாலிக்கிற்கு ஒரு டெஸ்ட்டில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.இந்த நடவடிக்கையை பாகிஸ்தான் கிரிக்கெட்சபை எடுத்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் சகலதுறை வீரர் மாலிக். இவர் உள்ளூரில் நடந்த போட்டியில் சியால் கோட் அணியின் தலைவராக இருந்தார். அந்த அணி கராச்சி ஜூப்ரா அணியிடம் வேண்டும் என்றே தோற்றது.

இந்தப் போட்டியில் வெற்றியை விட்டுக்கொடுத்து ஆடியதை சொகைப் மாலிக் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து மாலிக்கிடம் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க ஹரூண் ரஷித், ஷபிக் அகமது, அஸ்கர் ஹைடெர் ஆகியோர் அடங்கிய விசாரணைக்குழு அமைக்கப்பட்டது.

விசாரணைக்குழு முன் சாட்சியம் அளிக்கையில், மாலிக் தனது தவறுக்கு வருத்தம் தெரிவித்தார். இருப்பினும் அவர் ஒரு டெஸ்டில் விளையாடத் தடை விதிக்கப்பட்ட்டது. அத்தோடு இதன் ஒரு நாள் போட்டியில் ஆடும் கட்டணத்தில் 75 சதவீதம் அபராதமாகவும் விதிக்கப்பட்டுள்ளது. இதனைப் பாகிஸ்தான் கிரிக்கெட்சபை நேற்று முன்தினம் அறிவித்தது.

தடை காரணமாக மாலிக் மேற்கிந்தியத்தீவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் ஆடமுடியாது.


# பாக். அணி அறிவிப்பு

மேற்கிந்தியத்தீவுக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களான அக்தர், முகமது சமி காயம் காரணமாக அணியில் இடம் பெறவில்லை.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்பதற்காக மேற்கிந்தியத்தீவு செல்கிறது. இதற்கான 17 பேர் கொண்ட பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் சர்ச்சை எழுப்பிய சொயப்மாலிக் அணியில் இடம் பெற்றுள்ளார். இவருக்கு ஒரு டெஸ்ட் விளையாடத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் மாலிக் முதல் டெஸ்டில் இடம்பெற மாட்டார் எனத்தெரிகிறது.

அணி: இன்சமாம்(தலைவர்), யூனிஜ் கான், யாசிர் ஹமிது, சல்மான்பட், அப்ரிடி,யூசுப் யுகானா, ஆசிம் கமால், பஜித்கான், கம்ரான் அக்மால், அப்துல் ரசாக்,ராணா நவீத் உல் ஹசன், ஷபீர் அகமது, சாயித் நசீர், இப்திகார் அன்சும்,மாலிக், அர்ஷத்கான், டேனிஷ கனேரியா.

# சிறிலங்கா கிரிக்கெட் சபையின் பணிப்பாளர் மெண்டிஸ் இராஜினாமா



சிறிலங்கா கிரிக்கெட் சபையில் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கடமையாற்றிய முன்னாள் அணித்தலைவர் துலிப் மெண்டிஸ் அப்பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

இதற்கான காரணத்தை அவர் கூற மறுத்திருந்தபோதும் கடந்த மார்ச்சில் கிரிக்கெட் சபையை அரசு கலைத்த பின்னர் நடைபெறும் மாற்றங்களே காரணமாக இருக்கலாம். மெண்டிஸ் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் நிறைவேற்ற திகாரியாகப் பொறுப்பேற்றார். இவர் 1982ஆம் ஆண்டு இங்கிலாந்துடனான ஆரம்ப டெஸ்ட் போட்டியில் பங்கேற்றார். அத்துடன் மூன்று வருடங்களின் பின்னர் சிறிலங்காவிற்கு முதல் டெஸ்ட்த் தொடர் வெற்றியை (இந்தியா) பெற்றுக்கொடுத்தார். போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் 1988ஆம் ஆண்டு பயிற்றுனராகவும், முகாமையாளராகவும், தேர்வாளராகவும் பணியாற்றினார்.

இவரின் இராஜினாமா பற்றி இந்த வாரக் கடைசியில் அறிவிப்பார் எனக் கூறப்படுகிறது. ஆனால் முன்னாள் சபைத்தலைவர் திலங்கசுமதிபாலா அரசிற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிவித்ததையடுத்து இவர் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள இந்த முடிவை எடுத்திருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது.

# சர்வதேச தடகளப் போட்டியில் இந்த ஆண்டு பதக்கம் வெல்வேன்

சர்வதேச தடகளப் போட்டியில் இந்த ஆண்டு பதக்கம் வெல்வேன் என்று இந்தியாவின் நீளம் தாண்டும் அஞ்சுஜோர்ஜ் உறுதியளித்துள்ளார். இந்த பருவகாலத்தில் நான் 20 முதல் 24 சர்வதேச போட்டிகளில் பங்கேற்க திட்டமிட்டுள்ளேன். பொதுநலவாய போட்டிகள் அடுத்த ஆண்டு மெல்பேர்ன் நகரில் நடைபெற இருக்கின்றன. அதிலும் பங்கேற்பேன். வரும் ஜூன் மாதம் அமெரிக்கவில் கிளாசிக் போட்டிகள் நடக்கின்றன. அதிலும் கலந்து கொள்கிறேன். அதன் பிறகு சிங்கப்பூர் மலேசியா, பாங்கொக் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நடைபெறுகின்ற போட்டிகளிலும் நான் பங்கேற்க இருக்கிறேன்.

உலக அளவில் முதல் மூன்று இடங்களில் ஏதாவது ஒரு இடத்தை பிடிக்கவேண்டும் என்பது என்னுடைய ஆசையாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஸ்பானிஷ் லீக் கால்பந்துத் தொடர் பார்சிலோனா அணி முன்னிலையில்



ஸ்பானிஷ் லீக் கால்பந்துத் தொடரில் எப்.சி. பார்சிலோனா அணி தொடர்ந்து முதல் இடத்தைத் தக்க வைத்துள்ளது.

முன்னணிக் கால்பந்து கிளப் அணிகள் பங்கேற்கும் இத் தொடர் ஸ்பெயினின் பல்வேறு இடங்களிலும் நடக்கிறது. கடந்த சனிக்கிழமை நடந்த லீக் போட்டியில் பார்சிலோனா, அல்பாசிடி அணிகள் மோதின. முதல் பாதியில் கோல் ஏதும் அடிக்கப்படவில்லை. இரண்டாவது பாதியில் பார்சிலோனா வீரர்கள் அபாரமாக ஆட ஆட்டத்தில் விறு விறுப்புக் கூடியது. சாமுல் இடோ 66ஆவது நிமிடத்தில் முதல் கோல் அடித்தார். இத்தொடரில் இவர் அடிக்கும் 22ஆவது கோல் இது. அதிக கோல் அடித்துள்ள வீரர்கள் பட்டியலில் சாமுல் முதலிடத்தில் இருக்கிறார்.

பின்னர் ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் இளம் வீரரான லியோனல் மெஸ்சி கோல் அடிக்க பார்சிலோனா அணி 2-0 முன்னிலையில் வெற்றி பெற்றது. இத் தொடரில் பார்சிலோனா 78 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது. ரியல்மாட்ரிட் (72 புள்ளி) இரண்டாவது இடத்திலும், செவில்லா (58 புள்ளி) மூன்றாவது இடத்திலும் உள்ளன.

# துவிச்சக்கரவண்டிப் போட்டியில் கலந்துகொள்வோர் விண்ணப்பிக்குக

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டிகள் இடம்பெறவுள்ளதால் இந் நிகழ்வில் ஒட்டுசுட்டான் மாந்தைகிழக்கு பிரதேச விளையாட்டுக்கழக வீரர்களும் பங்குபற்ற விரும்பினால் தங்கள் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலோடு எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்பு விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து துணுக்காய்ப் பிரதேச செயலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் சசிதரசீலன் தெரிவித்துள்ளார். (24)

# தென்மராட்சிப் பிரதேச தடகளப் போட்டிகள்

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள அனைத்து விளையாட்டுக் கழகங்களுக்குமிடையேயான தடகளப் போட்டிகள் வரும் 7ஆம் ,8 ஆம் திகதிகளில் கொடிகாமம் நாவல[illegible] அரசினர் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளதாக தென்மரா[illegible] பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். இப்போட[illegible]யில் சிறப்பு விருந்தினராக யாழ்.அரசாங்க [illegible]திபர் கணேஷ், தென்மராட்[illegible] உதவி அரசாங்க அதிபர் சீனிவாசன் மற் றும் [illegible]த்[illegible]யோகத்தர்கள், வருகை[illegible]தரவுள்ளதாக இப்போட்டிகளில் 25இற்கும் [illegible] கழகங்கள் பங்கே[illegible]வுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)





# தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடர் மேற்கிந்தியத்தீவு அணியில் கொலின்மோர்

தென்னாபிரிக்காவுடன் நடைபெறவுள்ள ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்கவென மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு கொறிகொலின்மோர் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்.27வயதான வேகப்பந்து வீச்சாளர் சனவரியில் இங்கிலாந்துடனான வி.பி கிண்ணப்போட்டி அணியில் அறிவிக்கப்பட்டிருந்தபோதும் காயம் காரணமாக போட்டிகளில் பங்கேற்கத் தவறினார்.

2004ஆம் ஆண்டு நடைபெற்ற நட்வெஸ்ட் கிண்ண இறுதிப் போட்டியில் பங்கேற்ற வெய்ன்ஸ்மித், சேவியர் மார்ஷல் ஆகியோரும் இவ்வணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். அதேவேளை தற்போதைய டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கும் ரினோ பெஸ்ட், நர்ஷிங் டியோநரைண், பிடல் எட்வர்ட்ஸ், வைட்வோஷிங்டன் ஆகியோர் ஒரு நாள் அணியில் இடம்பெறவில்லை.

## சிந்தனைக்கு



இன ஒடுக்குமுறையாலும், இராணுவ அடக்குமுறையாலும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 04-05-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## சந்தேகப்பட எதுவுமில்லை

"மாமனிதர்" டி.சிவராம் அவர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பான விசாரணையில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. இரண்டு பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் தலைமையில் மூன்று பொலிஸ் குழுக்கள் 50 பேரிடம் விசாரணை நடத்தியும் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லையென கொழும்புப்பிராந்தியக் குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளமை ஆச்சரியத்திற் குரியதல்ல..

சிறிலங்கா பொலிஸ் குற்றப்புலனாய்வுத்துறையினர் கையில் குற்றம்செய்தவர்களைப் பிடித்து வந்து கொடுத்தால் தான் கைது செய்வார்களோ அன்றி அதனையும் சனாதிபதி சந்திரிகாவிடம் கேட்டுத்தான் செய்வார்களோ என்ற ஐயப்பாடே தற்பொழுது எழுந்துள்ளது.

ஏனெனில் டி.சிவராம் அவர்கள் கடத்திச் செல்லப்பட்டமையும் படுகொலை செய்யப்பட்டமையும் [illegible]ர்பாக முன்னேற்றம் காண்பதற்கு உதவத்தக்க பல சாட்சிகள், தடயங்கள் உண்டு. எடுத்துக் காட்டாக டி.சிவராம் அவர்கள் கடத்தப்பட்டபோது அவர் அருகில் அவரது நண்பர் ஒருவர் இருந்துள்ளார். இரண்டாவது கடத்தப்பட்ட இடத்தில் பொதுமக்கள், ஆட்டோ சாரதிகள் உட்பட பலர் இருந்துள்ளார்கள். அவர்களில் பலர் தகவல்களும் அளித்துள்ளார்கள்.

இது ஒரு புறம் இருக்க கடத்தப்பட்ட இடமும், அவரது சடலம் கிடந்த இடமும் சிறிலங்கா அரசின் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமாகும் ஆகையினால், இங்கு ஆயுதப்படைத்தரப்பின் கண்காணிப்பு மிக உயர்வானதாகும். ஆகையினால் ஆயுதப்படையினரின் கண்ணில் மண்ணைத்தூவிவிட்டு கடத்திச் செல்வதும், பின்னர் கொலை செய்து விட்டு வீசிவிட்டுச் செல்வதும் இலகுவான காரியமில்லை. அதாவது அவர்களின் ஒத்துழைப்போ அன்றி பங்கு பற்றுதலோ இன்றி அது சாத்தியமாக மாட்டாது.

ஆகையினால், இப் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பதும், அதன் பின்னணியில் இருந்து செயற்பட்டவர்கள் யார் என்பதும் கண்டறிதல் பெரும் சிரமம் மிக்கதொரு காரியமாக இருக்க மாட்டாது. ஆனால் இவை கண்டறிப்படுமா?அது நோக்கி விசாரணைகள் மேற்கொள்ளப்படுமா?என்பதே கேள்வியாகும்.

டி.சிவராமின் படுகொலையைத் தொடர்ந்து [illegible]குதியில் இருதினங்களின் முன் எழுதிய தலையங்கத்தில் இப்படுகொலை தொடர்பான விசாரணைகள் எதுவித முன்னேற்றமும் காணப்படப்போவதில்லையென குறிப்பிட்டிருந்தோம். இது விசாரணையில் முன்னேற்றம் காண்பதற்கு ஆதாரங்கள், சாட்சியங்கள் கிடைக்கப்பெறமாட்டாது என்பதினால் அல்ல. சிறிலங்கா ஆட்சியாளர்கள் நேர்த்தியானதொரு விசாரணையை விரும்பப் போவதில்லை என்ற வெளிப்பாட்டின் அடிப்படையிலேயே.

ஏனெனில் நேர்த்தியான விசாரணை என்பது குற்றவாளிகள் யார் என்பதை வெளிக்கொண்டு வந்துவிடும். ஆகையினால் நேர்த்தியான விசாரணை மூலம் தானே குற்றவாளிக் கூண்டில் ஏறி நிற்க அரசாங்கம் எவ்வாறு ஒத்துழைப்பு நல்கமுடியும்.

தமிழ் மக்கள் மீதான படுகொலைகளில் அரசாங்கம் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டிருப்பது ஒன்றும் புதியதொன்றல்ல. இத்தகைய படுகொலைகளில் தமது பங்கை மூடிமறைக்க சிறிலங்கா ஆட்சியாளர்கள் மேற்கொண்ட முயற்சிகளில் பல தோல்வியே அடைந்துள்ளன. எடுத்துக்காட்டாக மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் படுகொலையை மூடிமறைக்க சனாதிபதி சந்திரிகா மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

இந்த வகையில் டி.சிவராம் அவர்களின் படுகொலையிலும் தமக்குள்ள பங்கை மூடி மறைத்துவிடும் வகையில் விசாரணைகளை அரசாங்கம் முடக்கிவிடவோ அன்றி திசைதிருப்பிவிடவோ முற்படுதல் கூடும். ஆகையினால் கொலைகாரர்களைக் கண்டுபிடிப்பதில் பெரும் முன்னேற்றம் எதுவும் ஏற்படும் என எதிர்பார்ப்பதற்கு இல்லை.

இப்படுகொலை தொடர்பாகத் தமிழ் மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் தெரியவரவேண்டியது ஒரேஒரு விடயம் மட்டுமே. அதாவது இக்கொலையை ஆட்சியாளர்கள் தமது புலனாய்வுத்துறையினரைக் கொண்டு செய்தார்களா? அன்றி தமிழ் இனவிரோதக் குழுக்களைக் கொண்டு செய்தார்களா? என்பதே.

சனாதிபதி சந்திரிகாவோ அன்றி அவரது அரசாங்கமோ இப்படுகொலைக்கும் தமக்கும் சம்பந்தமில்லை எனக்கூறுவதும், சிறிலங்கா அரசின் நிதியில் துணைப்படையாக இயங்கும் தமிழ் விரோதக் கும்பலுக்கும், தமக்கும் தொடர்பில்லை எனக் கூறுவதும் ஒன்றே. அத்தோடு எந்நிலையிலும் இத்தகைய குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் ஒப்புக்கொள்ளப்போவதில்லை. ஆனால் இப்படுகொலையை அரசாங்கமே புரிந்ததென்பது உறுதியாகி அது அம்பலப்பட்டு, அசிங்கப்பட்டுப் போவது மட்டும் நிச்சயமான நிகழ்வாக அமையும்.

# நான்கு தேர்தல்களுக்கு தயாராகுக!

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் நான்கு தேர்தல்களுக்கு ஆயத்தமாக இருக்கும்படி தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க நாட்டின் சகல பிரதி தேர்தல் ஆணையாளர்களுக்கும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பிரதம தேர்தல் ஆணை யாளர் திணைக்களத்தில் நடந்த விசேட கூட்டம் ஒன்றில் இதனைத் தெரிவித்த அவர் வெகுவிரைவில் பிரதேச சபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளதென்றும், மேலும் மூன்று தேர்தல்கள் எதிர்வரும் காலங்களில் நடைபெறப்போவதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு தேர்தல் பட்டியல் இம்மாதம் 30 ஆம் திகதிக்குள் தேர்தல் திணைக்களத்தால் உறுதிப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு தேர்தல் வாக்காளர் பட்டியலின்படி சனாதிபதித் தேர்தல் நடைபெற்றால் இதற்காக நூறு கோடி ரூபாய் செலவிடப்படும் எனத்தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## அதிபர்கள் பணிநீக்கத்தை ஏற்க முடியாது; அரச சேவைகள் ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

கொழும்பு ஆனந்தா கல்லூரி அதிபர் பீ.ஏ.அபேரத்ன மற்றும் கண்டி கிங்ஸ்வுட் கல்லூரி அதிபர் ரன்ஜித் சந்ரசேகர ஆகியோரைப் பதவி நீக்கம் செய்ய சிறிலங்கா கல்வியமைச்சு எடுத்த தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென அரச சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அவ்விருவரையும் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளுமாறு ஆணைக்குழு கல்வியமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது. குறித்த இரு கல்லூரிகளின் அதிபர்களையும் பணி நீக்கம் செய்வதற்கு அனுமதி கேட்டு கல்வியமைச்சின் செயலாளர் அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிய கடிதத்திற்குப் பதிலளிக்கும் வகையிலேயே ஆணைக்குழுவினால் கல்வியமைச்சின் செயலாளருக்கு இக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.அதிபர்கள் இருவருக்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்கள் இருக்குமானால் அரச சேவைகள் ஆணைக்குழு மேற்கொள்ளும் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு அமைய கல்வியமைச்சின் மேலதிக செயலாளரின் தலைமையின் கீழ் ஒரு குழுவை நியமித்து அக்குழு விசாரணைகளை மேற்கொண்டு இருவார காலத்தில் அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அறிவித்திருக்க வேண்டும். சிறிலங்கா சனாதிபதி விசாரணைப் பிரிவு இவ்விடயம் குறித்து விசாரணை செய்தமை தமக்கு எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாதபோதிலும் அதிபர்களைப் பதவி நீக்கம் செய்த நடவடிக்கையானது அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் சிக்கலை ஏற்படுத்தும் எனவும் அந்த ஆணைக்குழுவின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலை அதிபர்கள் பதவிநீக்கம்! சனாதிபதி—பிரதமர் கடும் வாக்குவாதம்!

(கொழும்பு)

அண்மையில் தென்னிலங்கையின் பிரபல பாடசாலைகளின் அதிபர்களைப் பதவிநீக்கம் செய்யப்பட்டது தொடர்பாக சிறிலங்காப் பிரதமர் ராஜபக்ஷவுக்கும் சனாதிபதிக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டதாக 'ராவய' தெரிவித்துள்ளது.

இந்தப் பதவி நீக்கம் தொடர்பில் தமக்குப் பிரச்சினைகள் இருப்பதாகவும், இந்நடவடிக்கையை எடுக்க முன்பு கருத்திற்கொள்ள வேண்டிய சில விதிமுறைகளைச் சிந்திக்க வேண்டும் எனவும் மகிந்தராஜபக்ஷ கூறியிருப்பதுடன், மேற்படி அதிபர்கள், கல்வியமைச்சுடன் வெறுப்பைச் சம்பாதித்திருக்கிறார்கள் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்துக் கடுமையான ஆத்திரத்திற்குள்ளான சனாதிபதி சந்திரிகா பிரதமருடன் கோபாவேசமாக வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## எஸ்.பி.இற்குப் பொதுமன்னிப்பு வழங்க சனாதிபதியிடம் ஐ.தே.கட்சி கோரும்

### கொழும்பு ஆங்கில வார இதழ் தகவல்

சிறைத்தண்டனை அனுபவிக்கும் ஐ.தே. கட்சியின் பிரதம அமைப்பாளரான எஸ்.பி திசாநயக்கவுக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு ஐ.தே. கட்சி சந்திகாவை கோரவிருப்பதாக சண்டேலீடர் தெரிவித்துள்ளது.

திசாநாயக்கவின் குடும்பத்தினரின் அழுத்தம் காரணமாகவும் தற்போது மேச்சனட்ஸ் வாட்டில் சிகிச்சை பெற்றுவரும் திசாநாயக்க பல பௌத்த பிக்குகளிடமும், ராஜதந்திரிகளிடமும் விடுக்கும் வேண்டுகோளையடுத்தும் கட்சி இந்தப்பொது மன்னிப்பைக் கோரவுள்ளதாகப் பத்திரிகை மேலும் தெரிவிக்கின்றது.

இந்த இறுதிநேர முடிவு அண்மையில் எஸ்.பி.திசாநாயக்கவை மிலிந்த மொறகொட சென்று பார்த்தபின் எடுக்கப் பட்டதாகும்.

பல கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பிக்கள் சந்திரிகாவுடன் சுமுகமான உறவைக் கொண்டிருப்பதால் அவர் தனக்கு மன்னிப்பு வழங்கலாம் என மிலிந்த மொறகொடவிடம் திசாநாயக்க தெரிவித்திருக்கின்றார்.

பின்னர் மொறகொட ரணில்விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசிய போது ரணில் இதற்கு சம்மதம் தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

அதனையடுத்து இவ்வாரம் மொறகொட சந்திரிகாவைச் சந்திப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சிறுவர்களை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுத்துவதை தடைசெய்ய கல்வியமைச்சு தீவிரமுயற்சி

(கொழும்பு)

பாடசாலைச் சிறுவர்கள் உட்பட சிறுவர்களை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுத்துவதைத் தடைசெய்யும் வகையில் சிறிலங்கா கல்வியமைச்சு சுற்றுநிருபம் ஒன்றைத் தயாரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் பாடசாலையில் கல்வி கற்கும் சிறுவர்களையும், பழைய மாணவர்களையும் இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதால் அவர்களின் ஒழுக்கம் சீர்குலைவதாகவும் வேறு வன்முறைகளிலும் ஈடுபட வாய்ப்பு ஏற்படும்எனவும் தெரிவித்து மேற்படி தடைவிதிப்பு சுற்றுநிருபம் தயாரிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இந்த நடடிவக்கைக்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையும் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் இந்தச் சுற்றுநிருபம் பின்னர் சட்டரீதியாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## அமைச்சரை அகற்ற அரசு உத்தேசம்!

சிறிலங்கா மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பவற்றை அரசு தனியார்மயப்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது. இதற்கு எதிராக மின்சக்தி எரிபொருள் அமைச்சர் தெரிவித்த கருத்துக்களால் அவரை மின்சக்தி அமைச்சு பதவியில் இருந்து நீக்குவதற்கு அரசு உத்தேசித்துள்ளது. அரசாங்கம் எடுத்துள்ள இத்தீர்மானம் பெரும் பின்னடைவு ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புகையிரதக் கடவைகளில் பொலிசாரை நிறுத்த முடிவு

(கொழும்பு)

அளவ்வையில் நடந்த பேருந்து புகையிரத விபத்திற்குப் பின் புகையிரதக் கடவையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு உதவியாக சகல புகையிரதக் கடவைகளிலும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்கப் போவதாக போக்குவரத்து சபை சிரேஷ்ட உத்தியோகத்தர் சந்திரதிலக தெரிவித்தார்.மேற்படி அளவ்வை பேருந்து-புகையிரத விபத்தில் முப்பந்தைந்துபேர் உயிரிழந்தமை தெரிந்ததே.

# இருபது வருடங்களில் கிடைத்த சரியான சந்தர்ப்பம்;
# பொதுக்கட்டமைப்பைத் துரிதமாக அமைக்க வேண்டும்

## சனாதிபதி சந்திரிகா நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

நிரந்தர சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்காக இருபது வருட காலத்தில் ஏற்பட்ட சரியான காலம் இது எனவும் இதனைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் அமைப்புடன் பொதுக்கட்டமைப்பொன்றைத் துரிதமாக அமைக்க வேண்டுமென சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசிய ஆலோசனைச் சபையின் சமயக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே சனாதிபதி சந்திரிகா இவ்வாறு கூறியுள்ளார்.

அரசாங்கத்துடன் இணைந்து செயற்படமுன்வந்தமை தேசிய மட்ட அடிப்படையில் கிடைத்த பெரும் வெற்றி எனவும் கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,எந்தத் தரப்பினர் எதிர்த்த போதிலும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். இந்த இருபது ஆண்டுகளுக்குள்- இந்தப் பிரச்சினை ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரை பிரச்சினையைத் தீர்ப் பதற்கான இவ்வாறானதொரு சரியான சூழ்நிலை உருவாக வில்லை. தற்போது எப்போதும் இல்லாத நிலையில் சமாதானத்திற்கான முதலாவது அடியாக காலை உயர்த்திய மாத்திரத்திலேயே உள்ளோம். தற்போது முதலாவது அடியை வைப்பதற்கான சரியான சந்தர்ப்பம் வந்துள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சிலர் எமது அரசில்- கட்சியிலும் உள்ளனர். எதற்குப் பொதுக்கட்டமைப்பு அரசாங்கத்தினால் எப்படியும் இந்த நடவடிக்கையை முன்னெடுக்க முடியும் எனக் கூறுகின்றனர்.

பொதுக்கட்டமைப் பொன்றில் விடுதலைப் புலிகள் சட்டரீதியாகத் தொடர்புபடாவிட்டாலும் உத்தியோகப் பற்றற்ற நிலையில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஆறு ஏழு வருடங்களாகச் சிறப்பாகக் கொண்டு செல்கின்றனர்.

இந்தப் பொதுக்கட்டமைப்பு வேண்டாமெனக் கூறுவோரிடம் பேச்சுவார்த்தை நடத்திப் பார்த்துள்ளேன். அவர்களிடம் அதற்குத் தீர்வுகள் இல்லை. அப்படியானால் மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்து சகலரையும் கொன்றொழிப்போமெனக் கூறும் போது அதற்கு ஆம் எனக் கூற முடியாது.

யுத்தத்தில் அரசாங்கம் வெற்றி பெற முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்களுக்கும் முடியாது. எமக்கும் முடியாது. இதுவே உண்மை நிலையாகும். வடக்குகிழக்குப் பொதுக்கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்படும் பொழுது அரசியல் தேவைகளை முன்வைக்கக் கூடாதெனவும் கூறிய அவர்,

இது சமாதானத்தை நிலைபெற வைக்கக் கிடைத்த பெரும் சந்தர்ப்பம். அதனைச் செய்வதற்கு நாட்டின் தலைவி என்ற வகையில் நான் செயற்படுவேன். அதனைச் செயல் படுத்தப்போய் அரசாங்கம் கவிழும் என எதிர்க்கட்சியினர் சிலர் கதைத்துக் கொண்டிருக்கின்றனர்.

எனினும் இது எமது பிரச்சினை ஆகும். அரசாங்கம் வீழ்ச்சி கண்டால் சிலருக்கு அமைச்சுப் பதவி இல்லாமல் போகும் எனக்கு சனாதிபதிப் பதவி இல்லாமல்போகும். எனினும் நாட்டின் பிரச்சினை இதனைவிட விசுவரூபமானது என்று கூறினார்.

## இன்று அடையாள பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் தொழிற்சங்கம் இன்று அடையாள பணிப்புறக்கணிப்பு ஒன்றில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது. இன்று பாராளுமன்றத்தில் மின்சாரசபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றை மீளமைப்பது தொடர்பிலான அரசாங்கத்தின் பரிந்துரைகள் சமர்பிக்கப்படவுள்ளன.இதற்குத் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தம் விதமாகவே இந்த அடையாளப்பணிப்புறக்கணிப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக் கப்படுகின்றது. (32)

## மக்களின் வறுமை நிலையைப் போக்க
## யாழ். செயலகத்தில் நேற்று ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அமுல் செய்யப்படும் புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தித் திட்டங்களூடாக இங்குள்ள மக்களுக்கு நிலவும் வறுமை நிலைமையை ஒழிப்பது சம்பந்தமான ஆய்வரங்கு நேற்றுப் பிற்பகல் யாழ். அரச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற இவ் ஆய்வரங்கில் யாழ். குடாநாட்டில் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ். குடாநாட்டில் மக்களுக்கு நிலவும் வறுமையை அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் நடவடிக்கைகள் மூலம் எவ்வாறு போக்குவது என்பது பற்றி விரிவாக ஆராயப்பட்டு சில முன்மொழிவுகளும் வைக்கப்பட்டன.

இதில் ஆய்வுரைகளை யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் ப. வித்தியானந்தன், யாழ். மாவட்ட அரசசார்பற்ற இணைத்தலைவர் பொ. விக்கினேஸ்வரன், நியாப்திட்ட பணிப்பாளர் க. பாலகிருஷ்ணன் ஆகியோர் நிகழ்த்தினர். (33)

## பத்துப் பாராளுமன்ற ஆசனங்கள்!
## யாழ்.மாவட்டத்திற்குக் கிட்டலாம்

யாழ். மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவாகும் பாராளுமன்ற உறுப்பினர்களது தொகை 10 ஆக அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை கடந்த காலங் களைவிட அதிகரித்திருக்கின்றமையைக் காரணம் காட்டியே இது தெரிவிக் கப்படுகிறது. அந்த வகையில் கடந்த ஆண்டு பொதுத்தேர்தலின்போது ஆறு இலட்சத்து 51 ஆயிரத்து 361 ஆக இருந்த யாழ். மாவட்ட வாக்காளர்களது எண்ணிக்கை இவ்வாண்டு வாக்காளர் டாப்பு சீர்திருத்தத்தின்போது ஏழு லட்சத்து இரண்டாயிரத்து 74 ஆக அதிகரித்திருக்கிறது. இவ் அதிகரிப்பானது யாழ். மாவட்டத்தில் இதுவரை காலமும் இருந்துவரும் ஒன்பது பாராளுமன்ற பிரதிநிதித்துவம் எதிர்காலத்தில் பத்து ஆக அதிகரிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (33)

## இல.விவகாரத்தில் நேரடித் தலையீடு;
## இந்திய அரசு ஆராய்கின்றதாம்!

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயம் தொடர்பில் நேரடியாக தலையிடுவதற்கான ஏதுநிலை குறித்து இந்தியா ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இலங்கை இன விவகாரத்தினை காரணம் காட்டி அந்நிய நாடுகள் இலங்கையில் தளம் அமைப்பது இந்திய நலன்களுக்கு அச்சுறுத்தலாக அமையுமென இந்திய புலனாய்வு பிரிவினால் வழங்கப்பட்ட விசேட அறிக்கையினை அடுத்து இலங்கை விவகாரம் குறித்த இந்திய நிலைப்பாட்டில் மாற்றம் கொண்டுவர இந்திய கொள்கை வகுப்பாளர்கள் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.இதற்கு முன்னோடியாக இந்திய தலையீட்டிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாமெனக் கருதப்படும். ஜே.வி.பி யினருடன் சமரச முயற்சிகளில் இந்தியத்தரப்பு ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கனவே இந்தியாவிற்கு அழைக்கப்பட்ட ஜே.வி.பி தலைவரிடம் இது குறித்து மறைமுகமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளதோடு ஆனந்தசங்கரி ஊடாக ஜே.வி.பியுடன் இந்தியா தொடர்புகளை ஏற்படுத்திவருவதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் ஜே.வி.பியுடன் ஆனந்தசங்கரி பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளதையும் இந்தப் பேச்சுக்களில் முக்கியமாக இந்திய அதிகாரப் பரவலாக்கலை ஒத்த தீர்வு ஒன்றை இலங்கையில் ஏற்படுத்துவதற்கு இந்தியா விரும்புவதாகவும், இதற்கு ஜே.வி.பி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் ஆனந்தசங்கரி ஜே.வி.பித்தரப்பிடம் கோரிக்கை விடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கனவே இலங்கை விவகாரத்தில் இந்திய தலையீடு ஏற்பட்டபோது தென்னிலங்கையில் ஜே.வி.பி கடுமையான எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தமையால்இந்தியா ஜே.வி.பி யின் ஆதரவுடன் இலங்கை விவகாரத்தில் தலையிட விருப்பம் கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. அரசாங்கத்தில் முக்கிய அங்கம் வகிக்கும் ஜே.வி.பி யின் ஆதரவுடன் இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தலையிடுவதன் மூலம் தான் விரும்பிய தீர்வினை இலகுவில் ஏற்படுத்த முடியுமென இந்தியா கருதுகின்றது. அதேவேளை ஜே.வி.பி யின் தற்போதைய அரசியல் செல்வாக்கு தனக்கு கூடுதல் ஒத்துழைப்பாக அமையும் என்பதால் இந்தியா ஜே.வி.பியின் முழுமையான ஆதரவைப் பெற முனைவதாகவும் சுட்டிக்காட்டப் படுகின்றது.

## பேருந்து -ஹைஏஸ் மோதல்
## ஹைஏஸ் சாரதி காயம்!


(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் நேற்று ஹைஏஸ் வாகனம் பேருந்துடன் மோதியதில் ஹைஏஸ் வாகன சாரதி காயமடைந்தார்.

இச்சம்பவம் குறித்து தெரிய வருவதாவது.

முல்லைத்தீவிலிருந்து முகமாலை நோக்கி சென்றுகொண்டிருந்த பேருந்து புதுக்குடியிருப்பு சிவன் கோவில் பகுதி வீதியில் பயணிகளை ஏற்றுவதற்காக நின்ற போது பின்னால் வந்த ஹைஏஸ் வாகனம் பேருந்தின் பின்புறத்தை மோதிக கொண்டது. இதன்போது சாரதி காயமடைந்துள்ளார். சம்பவ இடத்துக்குச் சென்ற காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டனர். (08)

## நல்லூர் மருதடி வீதிப் பகுதியில்
## இளைஞர் வெட்டிக்கொலை!



யாழ்ப்பாணம் நல்லூரில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் நேற்றுமுன் தினம் இரவுவெட்டிப் படுகொலை செய்யப் பட்டுள்ளார்.

நல்லூர் மருதடி வீதிப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.நல்லூர் செட்டித்தெருவுக்கு அண்மையில் உள்ள மருதடி வீதிப் பகுதியில் வசித்து வரும் 22 வயதுடைய மான்வேட் கமிற்றன் என்ற இளைஞரே கொல்லப்பட்டவராவார். இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:குறிப்பிட்ட இளைஞர் நேற்றுமுன்தினம் மாலை நண்பர் ஒருவரின் பிறந்தநாள் நிகழ்வில் கலந்து கொள்வதற்காகச் சென்றதாகவும், பின்னர் இரவு 11.30 மணியளவில் அவரது வீட்டு வாசல்ப்பகுதியில் சத்தம் கேட்டபோது திருடன் என்று கத்தியவாறு வீட்டிலிருந்தவர்கள் அப்பகுதிக்கு ஓடியபோது அங்கே இவரது சடலம் காணப்பட்டுள்ளது. இச்சடலத்திற்கு அருகில் வெட்டுவதற்குப் பயன்படுத்தப்படாத மற்றொரு கத்தி காணப் பட்டுள்ளது. இதனால் இக்கொலைச் சம்பவத்தில் பலர் பங்குகொண்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. இவரது வீட்டுக்காணிக்குள்ளேயே இவரது சடலம் கழுத்துப்பகுதியில் வெட்டப்பட்ட நிலையில் காணப் பட்டது.சடலத்தை யாழ். மாவட்ட நீதிபதி திருமதி சிறீநிதி சந்திரசேகரன் நேற்றுக் காலை 8.30 மணியளவில் நேரடியாகச் சென்று பார்வையிட்டார். (33,41,சு)


## சாவு அறிவித்தல்

### கந்தையா சேதுராசா(சின்னராசா)

(முன்னாள் உத்தியோகத்தர்,பெருந்தெருக்கள் திணைக்களம்)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும்.கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்டகந்தையாசேதுராசா(சின்னராசா) அவர்கள் நேற்றுமுன்தினம் (2005. 05. 02) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-கற்பகம் தம்பதிகளின் அன்பு மகனும், காசிப்பிள்ளை காலஞ்சென்ற அன்னமுத்து தம்பதிகளின் மருமகனும், மீனாம்பாளின் அன்புக் கணவரும், செந்தில்ராசா, குமுதினி, பிரபாகரன்,சசிகரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், இராசகுமார், அருந்ததி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான பத்மாவதி, சிவப்பிரகாசம், மாணிக்கம், சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சுந்தரம் , சிரோன்மணி, புவனேஸ்வரி,நற்குணசிங்கம், அமிர்தலிங்கம் சண்முகலிங்கம், தியாகலிங்கம், காலம்சென்ற சந்திரலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், சிந்துஜா,பிசிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளையாட்டரங்குவீதி,பருத்தியடைப்பு,
காப்பாய் தெற்கு,கோப்பாய். (6101)

தகவல்:-
குடும்பத்தினர்.


### அரசியல்துறை...

இத்துப்பாக்கித் தாக்குதலை மேற்கொண்ட ஆயுதக்குழுவினரால் தவறவிட்டுச் செல்லப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

### ஐ.தே.க...

இதேவேளை இந்தக்கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரையும் பொலிசார் கைது செய்துள்ளனர்.

அத்துடன் சந்தேகநபர்கள் பயணம செய்த மோட்டார் வாகனம், துப்பாக்கி என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக இரத்தினபுரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கூறியுள்ளார்.

### லெப்டினன்....

இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாகப் பொதுச்சுடரினை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் எற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் ஏற்றிவைத்தார். இரண்டாம் லெப்டினன் மயூரி அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் ஈகச்சுடர் ஏற்றிவைக்க மாவீரர் மயூரியின் சகோதரர் மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து இவ்நினைவில்லத்தை அன்பளிப்பாக நிர்மாணித்துத்தந்த கிளிநொச்சியைச் சேர்ந்த சியாமளா அவர்களின் தந்தை அமரர் கந்தசாமி அவர்களின் நினைவுக்கல்வெட்டினை அன்னாரின் மகன் வரதன் அவர்கள் திரைநீக்கம் செய்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து மயூரி நினைவில்லத்தின் கட்டடத்தை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். விழுப்புண்ணடைந்த போராளி செல்வி பாடினி அவர்களின் தலைமையில் நிகழ்ந்த இந்நிகழ்வில் தளபதிகள், பொறுப்பாளர்கள், வைத்தியர்கள், ஆசிரியர்கள் மற்றும் விழுப்புண்ணடைந்த போராளிகள் எனப்பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இறுதியாக நன்றியுரையினை மயூரி நினைவில்லப் போராளி வேணி நிகழ்த்தினார்.

### முழு...

அல்லது மக்கள் விடுதலை முன்னணியின் மனதைக் குளிரச் செய்து தொடர்ந்தும் ஆட்சியைக் கொண்டு நடத்துவீர்களா என அமைச்சர் டியூ குணசேகரவிடம் சிங்கள நாளிதழ் ஒன்று கேள்வி எழுப்பியுள்ளது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், இக்கேள்விக்குப் பதிலளிக்க வேண்டியது அரசின் பிரதானியென்ற போதிலும் இன்று நடைபெற வேண்டியது என்ன என்பது குறித்து தன்னால் கூற முடியுமெனத் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை எமக்கு பெரும் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. அந்த மக்கள் குறித்து அரசாங்கம் போதியளவு கவனம் செலுத்த வேண்டும். முழு உலகமுமே அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தக்கூடிய ஒரு பின்னணி உருவாகிக் கொண்டு வருகிறது என்றார். (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 04ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது